புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1944-ம் ௵ அக்டோபர் ௴ 21௳ [ந. 220

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—23-ம் பக்கம் பார்க்க.

பர்மாவிலுள்ள முக்கிய ஜப்பானிய சப்ளை தளமானதும், காபா பள்ளத்தாக்கிலுள்ளதுமான டிட்டிமை 14-வது சேனையைச்சேர்ந்த இந்தியத் துருப்புகள் விடுவித்தன.

பிரஸங்கம் **CCXX.**

ஜெர்மனியைத் தாக்குதல்.

முடிவான கட்டம்.

(விக்ஹாம் ஸ்டீட்).

ஜெர்மனியுடன் முடிவான போரைத்துவக்க படை பலத்தைத் திரட்டி வரும்பொழுது மேற்குமுனையிலிருக்கும் நேசதேசப்படைகள் ராணுவ பிரச்னையைவிட அதிக சிக்கலான பிரச்னைகளையும் சமாளிக்கவேண்டும். ராணுவ பிரச்னை என்பது ஜெர்மனி நீடித்துப் போரை நடத்தாமல் அதை பரிஷ்காரமாக ஜெர்மன் பூமியிலேயே முறியடிக்க விடுவது. ராஜீய, ஆத்மீக பிரச்னைகள் என்பது ஜெர்மனியின் சக்தி முறியடிக்க முடியாததென்ற நம்பிக்கையை அழித்து விடுவது. மற்றொரு யுத்தத்தில் ஜெர்மனி வெற்றிபெறும் என்ற நம்பிக்கையையும் இழந்து விடும்படி செய்வது. இதைத் தவிர 11 வருடங்களாக நாஸிகளின் பிரசார முறையால் சீர்கெட்டும் உண்மையான நிலைமையை அறியக்கூடாததுமான ஜெர்மன் ஜனங்களை எவ்விதம் ஒழுங்கு படுத்துவது, போதிப்பது, சீர்திருத்தம் செய்வது என்பது மற்றொரு பிரச்னையாகும். அவ்விதம் செய்தால்தான் ஐரோப்பிய தேசங்களின் சமாஜத்தில் ஒரு முக்கிய ஸ்தானத்தை ஜெர்மனி வகிக்கக்கூடும்.

இந்த யுத்தத்தில் தோல்வி நிச்சயமென்றறிந்த ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அடுத்த யுத்தத்துக்காக ஆயத்தம் செய்து வருகிறார்களென்ற உண்மையான தகவல்களை முக்கியமான பிரிடிஷ் மந்திரிகள் வெளியிட்டிருக்கிறார்கள். 1918-ம் வருஷத்திற்குப்பின் நடைபெற்றதுபோல் ஒரு புதிய பலமான ராணுவ யந்திரத்தை அமைக்க அடிப்படையாக ஆபீஸர் படைகளை அமைப்பதென்றும் பிரஷ்யா-ஜெர்மன் ராணுவ ஜாதியையும் காப்பாற்றி விடுவதென்றும் ஜெர்மனி எண்ணம் கொண்டிருக்கிறது.

முக்கியமான ராணுவ நடவடிக்கையுடன் நேசதேசத்தார்கள் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் திட்டங்களையும் முறியடிக்கவேண்டும். நாஸிகளின் கொடுமையையும், நாஸி தத்துவத்தையும் ஒழித்து விடுவதுடன் அவர்கள் நின்றுவிடக்கூடாது. நாஸிதத்துவத்தைப் போல ஜெர்மன் ராணுவ ஜாதியும் உலக சமாதானத்திற்கு விரோதமானவைகள்.

இந்த விஷயத்தில் நேசதேசத்தார்கள் ஏற்கனவே முடிவுக்கு வந்து விட்டார்கள். அந்த முடிவுகளை சமீப எதிர்காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். யுத்தம் இந்த வருஷத்தில் முடிவடைந்து விடுமா அல்லது 1945 வருஷத்துக்கு நீடித்து விடுமா என்பதைப் பற்றி அபிப்பிராய பேதம் காணப்படுகிறது. பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி யுத்தம் முன்னதாக முடிந்துவிடு மென்கிறார். மிஸ்டர் சர்ச்சில் தாமதப்படுமென்கிறார். யுத்த முடிவு ஸீக்பிரட் அரணையும், ரைன் தற்காப்புகளையும் காபந்து செய்யும் ஜெர்மன் படைகளின வலிமையைப் பொறுத்தது.

மேற்கு முனையில் ஜெர்மன் படையில் 5 லக்ஷம் படைகளிருக்கிறார்களாவென்பது சந்தேகமென்று நேசதேச ராணுவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கிழக்குப் போர்முனையிலிருந்தும், இதாலியிலிருந்தும் உதவிக்காகப் படைகளை ஜெர்மனி கொண்டுவர முடியாது. நேசதேசத்தார்கள் வருங்காலத்திய தாக்குதலில் 2 மிலியன் உயர்தரமான பயிற்சிபெற்ற நல்ல முஸ்தீப்புள்ள படைகளை ஈடுபடுத்தக்கூடும். அவர்களிடம் விமான ஆதிக்கமிருந்து வருகிறது. நார்மண்டிப்போரிலிருந்து எதிரியின் போக்குவரத்துகளும், சப்ளைகளும் விமானத்தாக்குதலினால் பாதிக்கப்படுமென்பது வெளிப்பட்டது. ஆகையால் ஜெர்மனிக்கு நம்மைப்போல சமமான பலமிருந்தாலும் அது அதன் தோல்வியைத் தடுக்கமுடியாது.

மேற்கு முனையிலுள்ள ஜெர்மன் அரண் வெளிப்படையாகத்தான் பலமாகயிருக்கிறது. உண்மையில் அந்தரங்கத்தில் அது பலஹீனமுள்ளதென்று நேசதேசத்தார்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் நியாயமானதென்றுதான் வெளியாகும். இந்த வெளிக்கட்டடம் நொருங்கி விட்டால் ஜெர்மனி பேரில் சுலபமாகப் படையெடுத்து விடலாம். உள்நாட்டில் பலஹீனம் காணப்படுகிறது. ஜெர்மனியிலுள்ள 12 மிலியன் அயல்நாட்டுத் தொழிலாளர்களும் ஜெர்மனிக்கு எதிராகக் கலகம் செய்து சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நேசதேசத்தார்கள் அவர்களுக்கு வேண்டுகோள் செய்திருக்கிறார்கள். அனுபவம் வாய்ந்த ஜெனரல் ஈசன்ஹவர் அக்காலத்தில் இவ்விதமான முடிவுக்கு வந்திருக்கமாட்டார். ஜெர்மனியின் பின்னணியை அயல்நாட்டுத் தொழிலாளர்கள் குலைத்து விடும்பொழுது நேசதேசப் படைகள் ஜெர்மனியின் வெளிப்புற தற்காப்புகளை நொருக்க முயலுமென்று அவர் எதிர் பார்க்கிறார் என்ற முடிவுக்கு நாம் நிச்சயமாய் வந்து விடலாம்.

இந்த முடிவு சிறந்ததென்றால் சமீப சிலவார நடவடிக்கைகள் ஐரோப்பிய யுத்தத்தின் காலஅளவை முடிவு செய்துவிடும். இந்த நெருக்கடியான நிலைமையை ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் நன்றாய் அறிவார்கள். ஜெர்மன் நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும் பலமான அழிவு ஏற்படக்கூடிய போரை நீடித்து நடத்துவதைவிட சீக்கிரமாகச் சரணாகதி செய்வது தான் சிறந்ததென்று அதுமுடிவு செய்யலாம். ஹிம்லரும், ஜெர்மன் ரகசியப் போலீஸாரும் ஏற்பாடு செய்துவரும் கொரில்லாப் போர் நேசதேசப் படைகளுக்கு தாத்காலிகமாக நஷ்டமும், சங்கடமும் ஏற்படக்கூடும். நாஸித்தலைவர்களைக் கைதுசெய்து சிக்ஷைக்குட் படுத்தும் காலம் சற்று ஒத்திவைக்கப்படு மென்பதைத்தவிர எதிரிக்கு வேறு பலன் கிட்டாது. மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் ஐரோப்பியப் போரை ஜெர்மன் சேனை முடிவுசெய்த பின் நாஸித்தலைவர்கள் கலகக்காரர்களாகவும், பிரஷ்டர்களாகவும் கருதப்படுவார்கள்.

ஜெர்மனியை பலமாகத் தாக்கப்போகும் சமயத்தில் இந்த தோற்றங்களும், பிரச்னைகளும் நேசதேசத்தாரின் முன் நிற்கின்றன. இவைகள்தான் எதிர்காலத்திய ராணுவ நிகழ்ச்சிகளுக்குப்பின் திரைபோன்றவை.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

11—10—44 (புதன்கிழமை).	செம்படை டிரான்ஸில்வேனியாவின் தலைநகரமான குளூஜை யும், தெற்கு ஹங்கேரியிலுள்ள செகெட்டையும் பிடித் தது. அமெரிக்க விமானங்கள் பார்மோஸாவையும், பெஸ்கடோர் ஸையும் மறுபடியும் தாக்கின.
12—10—44 (வியாழக்கிழமை).	அமெரிக்க விமானங்கள் பார்மோஸாவையும் பெஸ்க டோர்ஸையும் மறுபடியும் தாக்கின. அக்டோபர் 11, 12 தேதிகளில் 396 விமானங்களும், 63 கப்பல்களும் எதிரிக்கு நஷ்டமாகின. ருஷ்யர்கள் கிழக்குப் பிரஷ்யாவைத் தாக்க ஆரம்பித்தார் கள்.
13—10—44 (வெள்ளிக்கிழமை).	அமெரிக்கர்கள் ஜெர்மனியில் ஆக்கனுக்குள் நுழைந்தார் கள். அமெரிக்க விமானங்கள் பிலிப்பைன்ஸிலுள்ள லூஸானைத் தாக்கின. ருஷ்யர்கள் லாட்வியாவின் தலைநகரமான ரீகாவைப் பிடித்தார்கள்.
14—10—44 (சனிக்கிழமை).	பிரிடிஷ் படைகள் கிரீஸின் தலைநகரமான ஆதென்ஸை மீட்டன.

(B)-செய்திச் சுருக்கம்.

பொதுப்படையான அம்சம்.—அக்டோபர் மாதத்திய யுத்தம் காலநிலைமையின் சௌகரி யத்தைப் பொருத்தது. வரப்போகும் மாரி காலத்தில் ஜெர்மனிக்கு சௌகரிய மேற்படு மென்று ஹிட்லர் நம்பியிருக்கிறான். மாரிகாலத்திற்குள் ஜெர்மனியைச் சுற்றிவரும் வளையத்தைப் பூர்த்தி செய்வதென்று நேசதேசத்தார்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அவ னுக்கு இருபுறத்திலும் இரண்டு பிறை வடிவமான அமைப்புகள் காணப்படுகின்றன. ஒன்று, கிழக்கில் பால்டிக்கிலிருந்து எட்ரியாடிக் வரையில் செல்லுகிறது. இது கிழக்கு பிரஷ்யா ஓரமாகவும், போலந்து, ஸெக்கோஸ்லாவாகியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா முதலிய இடங்களில் பரவியிருக்கிறது. மற்றொன்று மேற்குப் பக்கத்தில் வடக்குக்கடலி லிருந்து ஆரம்பமாகி, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், இதாலி வழியாக எட்ரியாடிக் கடலுக்குப் பரவிச் செல்லுகிறது.

மேற்குப்போர் முனை.—முக்கியமான போர் ஷெல்ட் நதி முகத்துவாரப் பிரதேசத்திலும், ரூர் பிரதேசத்திலும், வாஸ்கஸ் பள்ளத்தாக்கிலும் நடை பெருகிறது.

1. கடற்கரை.—வால்செரன் தீவில் வெஸ்ட் காபலியிலுள்ள அணை மறுபடியும் வெடி விமானங்களால் உடைக்கப்பட்டது. வால்செரன் தீவு இதுவரையில் நான்கு தடவை தாக்கப்பட்டது. முதல் தடவையிலும் வெஸ்ட் காபலி அரண்தான் உடைக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் பிளவு அதிகரித்து விட்டது. இரண்டாவது, மூன்றாவது தாக்குதல்கள் வால்செரனிலுள்ள பிளஷிங் துறைமுகத்தின் இருபக்கங்களிலும் நடைபெற்றன. வால் சேரன் தீபகற்பத்தின் கேந்திரஸ்தானமான வொன்ஸ்டிரெக்ட் பிடிபட்டது. ஒரு புதியபடை டெர்னியூசனிலிறங்கி விட்டது.

ஆண்ட்வெர்ப்புக்குப் போகும்வழியை சுத்திசெய்வதற்காகக் கனேடியப்படைகள் ஸீலாந்துக்குள் முன்னேறப் போர் புரிகிறார்கள்.

2. ஷெல்ட் நதியின் முகத்துவாரம்.—அதற்குத் தெற்கிலுள்ள ஜெர்மன் தற்காப்புப் பகுதிகள் சுத்தி செய்யப்பட்டு விட்டன. இதற்கும் லியோபால்ட் கால்வாய்க்கும் மத்தியில் ஜெர்மானி யர்கள் உக்கிரமாகப் போர் புரிகிறார்கள். கால்வாயைத்தாண்டி மற்றொருபடை வாடர் லியெட்டுக் கருகில் இறங்கி விட்டது. அது அதற்குமுன் இறங்கிய படையுடன் தொடர்பு

ஏற்படுத்தி விட்டது. ஷெல்ட் நதி முகத்துவாரத்திலுள்ள டச்சுத் துறைமுகமான பிரெஸ் கன்ஸுக்குச் சமீபத்திலுள்ள பிரதேசம் நேசதேசவசமாகி விட்டது. ஒவர்லூன் கைப்பற்றப் பட்டது. வென்ரேஜ் ஆக்கிரமப்படுகிறது.

3. **ஆர்ன்ஹெம் பிரதேசம்.**—பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி முன்னேறும் வாசலை விஸ்தாரப் படுத்தி வருகிறார். நிஜ்மேகனுக்கு அருகில் ஜெர்மானியின் முன்னணி தளங்களாக இருந்த கினிவும், எமெரிக்கும் பூர்ணமாக அழிக்கப்பட்டுவிட்டன.

4. **ஆகெனில்.**—படைத்தலைவர் சரண் அடைய மறுத்தபின் ஒரு சில நூற்றுக்கணக்கான ஸோல்ஜர்களும், அநேக பொதுமக்களும் நேசதேசக் கக்ஷிக்கு வந்து விட்டார்கள். ஆகெனிலிருந்து தப்பி ஓடும் மார்க்கம் அடைபட்டு விட்டது. தெருத் தெருவாக கடும் போர் நடைபெறுகிறது. பின்வாங்கிய வான் ரண்ட்ஸ்டெட் உள்நாட்டிலிருந்தும், ஆர்ன் ஹெமிலிருந்தும் உதவிப்படைகளை அவசரமாகக்கொண்டு வருகிறான்.

ஆகெனுக்குச் சமீபத்திலுள்ள ரிக்டெரிக்கும் கொல்ஷீடும் பிடிபட்டன.

5. **லோரைன் பிரதேசம்.**—ஜெனரல் பாட்டனின் அமெரிக்க மூன்றுவது சேனை மெட்ஸுக் கும் நான்ஸிக்கும் மத்தியில் கடும்போரை நடத்தி வருகிறது. இந்த வார ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் மெட்ஸுக்குச் சமீபத்திலுள்ள டிரியாண்ட் கோட்டையைக் கைப்பற்றினார் கள்.

6. **வாஸ்கஸ் பள்ளத்தாக்கு.**—அமெரிக்க 7-வது சேனை குன்றுகளின் தாழ்வரைகளில் போர் புரிந்து வருகிறது. சாபாமி, கார்னிமாண்ட், கிளான்விலி, பாண்டனுய் பிடிக்கப் பட்டன.

7. **லெட்கிலாட் பிரதேசம்.**—ஓரியாண்ட், கெடாமாண்ட், பிளானுய், டௌகாமாண்ட் விடுவிக்கப்பட்டன.

8. **ஜெர்மனிக்குள்.**—டேயிஸ்பர்க்கும், சார்பி அணையும் பலமாக வெடி விமானங்களால் தாக்கப்பட்டன.

கிழக்குப் போர்முனை.—போர் ஆர்டிக் கடலிலிருந்து எட்ரியாடிக் கடல் வரையில் நடைபெறுகிறது.

1. **ஆர்டிக் பிராந்தியம்.**—ஜெர்மன் படைகள் நார்வே எல்லைச் சரகத்துக்கு வந்து விட்டன.

2. **பால்டிக் பிரதேசம்.**—லாட்வியாவின் தலை நகரமும், பால்டிக்கிலுள்ள துறைமுகமு மான ரீகாவும், அதற்கு சமீபத்திலுள்ள ஷோக்கும் விழுந்து விட்டன. மெமலுக்குச் சமீ பத்திலுள்ள டில்ஸிட் தாக்கப்படுகிறது. பால்டிக் தீவுகளான வில்சண்டிலெடும், அப்ருகா வும் ஆக்கிரமிக்கப்பட்டன. பின்லாந்தில் பெட்ஸாமோ பிரதேசத்தில் படைகளிறங்கி விட்டன. ருஷ்ய—பின்னிஷ் ஒப்பந்தப்படி, ருஷ்யர்கள் நிக்கல் உலோகச் சுரங்கங்களுள்ள லினுபாமாராயைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பின்னிஷ் படைகள் லாப்லாந்தில் ரோவானியமியைக் கைப்பற்றினார்கள்.

3. **கிழக்குப் பிரஷ்ய எல்லைச்சரகம்.**—ஜெர்மன் அறிக்கை பிரகாரம் ருஷ்யர்கள் இன்ஸ் டெர்பர்க்குக்குக் கிழக்கில் வில்கோவிஸ்கனுக்கு இருபக்கத்திலும் 25-மைல் அளவுக்கு பலமான தாக்குதலைத் துவக்கி விட்டார்களாம். எல்லைச் சரகத்திலுள்ள விர்பாலீஸுக்குக் கிழக்கிலும், நியூஸ்டாட்டுக்கு சமீபத்திலும் பிரஷ்யாவுக்குள் படைகள் பிரவேசித்து விட்டன.

4. **டிரான்ஸில்வேனியாவில்.**—தலைநகரமான க்ளூஜும், ஓரொடியாமாரியும், பிஸ்டிரிடா வும் வீழ்ச்சிபெற்றன.

5. **ஹங்கேரியில்.**—தலைநகரமான புடாபெஸ்டில் யுத்த நிறுத்தத்தை ஆதரிப்பவர்களுக் கும், பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களுக்கும் தெருக்களில் போர் நடைபெறுகிறது. ஹங்கேரியின் ரீஜண்டான ஹார்தி வேலையிலிருந்து நீக்கப்பட்டான். நேசதேசப்படைகள் தீயிஸ் நதியி லுள்ள ஸாகெட்டையும், சுபொடிகாவையும், ஹார்கோலேயும், கிஸுஜ்ஸாலாஸையும், பிஸ்ட்ரியாவையும் பிடித்து விட்டார்கள்.

6. **யூகோஸ்லாவியா.**—சஞ்சாசெவாக், ஆடா, நாடெரெவோ, ரிபானி, டெல்வினு, குருஸெவாக், பெலிபோடோக், விராஞ்சி பிடிபட்டன.

7. **ஆல்பேனியா.**—சார்ந்தி பிடிபட்டது.

கிரீஸ்.—பிரிடிஷ் படைகள் தலை நகரமான எதென்ஸையும், துறைமுகமான பைரெயஸையும் ஆக்கிரமித்தன. ஜெர்மானியர்கள் ஸலோனிகாவைக் காலிசெய்து வருகிறார் கள். கார்பு, நெக்ஸாஸ் தீவுகள் சரண் புகுந்து விட்டன.

இதாலி.—காலநிலையில் சௌகரிய மேற்பட்டு விட்டதால் நேசதேசப்படைகள் பொலோனாவைத் தாக்கப் போரைத் துவக்கிவிட்டன. மேற்குப் பக்கத்தில் அமெரிக்க 5-வது சேனை பொலோனாவுக்கு மலைகள் வழியாகச் செல்லும் ரஸ்தாக்களில் போர் புரிந்து வருகிறது. எட்ரியாடிக் பகுதியில் பிரிடிஷ் 8-வது படை பூமிசியானோ நதியைத்தாண்டிய பின் பொலோனாவுக்குப்போகும் வழியிலுள்ள கெசெனாவை அணுகி வருகிறது. இந்த வாரத்தில் பிளாரென்ஸ், பொலோனா ரஸ்தாவைத் தாண்டி உள்ள லிவர்ச்னானோ என்னும் இடம் பிடிக்கப்பட்டது. கெஸ்லேஸா, மாண்டிகாம்போ, மார்காடொ, சாரசெனோ, மாண்டிடீ, ரூல்லாட்ஸ், மாண்டிபாம்பியானா, மாண்டிசியாகோ, காம்பட்டொலா முதலிய இடங்களும் கைப்பற்றப்பட்டன.

தூரக்கிழக்கு.—பார்மோஸாத் தீவு வெடி விமானங்களால் மூன்று தடவை பலமாகத் தாக்கப்பட்டது. முதல் தாக்குதல் 1,000 விமானங்களால் ஏழு தடவை நடைபெற்றது. இரண்டாவது தாக்குதலில் பார்மோஸாவும், பார்மோஸாக் கால்வாயிலுள்ள பிஷர்ஸ் தீவுகள் என்று சொல்லப்பட்ட 21 தீவுகளடங்கிய பெஸ்காடோர்ஸும் தாக்கப்பட்டன. 63 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன. 396 விமானங்கள் அழிக்கப்பட்டன. ஜப்பானுக்குத் தெற்கில் ரியூக்யூ தீவுகளுக்குச் சமீபத்தில் ஜப்பானின் 77 கப்பல்களும், 119 விமானங்களும் அழிக்கப்பட்டன.

சூபர் பறக்கும் கோட்டைகள் ஓகயாமாவையும், ஹெயிடோஸையும், பார்மோஸாத் தீவிலுள்ள எயினாஷோவையும் தாக்கின.

அமெரிக்கப் படைகள் பாலாத்தீவுகளிலுள்ள பாரியாகேசருத்தீவிலும் மேற்கு காரலைன்ஸிலுள்ள உலிதித்தீவிலும் இறங்கி விட்டன.

சைனா.—ஜப்பானியர்கள் க்வீபிங்கைப் பிடித்து விட்டார்கள். குவாங்க்யூ மாகாணத்தின் தலைநகரமான க்வேலினைப் பிடிக்க ஜப்பான் செய்த முயற்சி பயன்படவில்லை.

பர்மா.—டிட்டிம் விழுந்துவிட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

8—10—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—துருப்புகள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

நீராவி யந்திரங்கள், ரயில் கார்கள், விமான நிலயங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

ரயில்வேப் பாலங்கள்.—பாட்மஸ்டர் (Badmuster), எஸ்க்கர்ச்சென் (Euskirchen), ஜெர்மனியிலுள்ள ஆர்வெய்லர் (Ahrweiler)

ரயில்வே ஜங்ஷன்கள்.—நோபெல்டன் (Nohfelden).

எதிரி முனைகள்.—மெட்ஸ் (Metz), பால் (Baal) ஜூலிக் (Julich).

கப்பல்கள்.—வட எட்ரியாடிக் (N. Adriatic), ஜினோவா (Genoa) வளைகுடா.

ராணுவ இலக்குகள்.—ஆல்பேனியா (Albania).

தூரக்கிழக்கு (Far East).

ஜாம்போங்கா (Jamboanga), பிலிபைன்ஸ் (Philippines).

எதிரி சைனியங்கள்.—வட ஸெலிபஸ் (N. Celebes), ஹால்மஹேரா (Halmahera), அம்பாய்னா (Amboina).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—மார்க்கஸ் (Marcus) தீவுகள்.

பர்மா (Burma).

ரயில்வேப் பாலம்.—டாரா (Dara).

9—10—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—

ராணுவ ஸ்தாபனங்கள்.—ஜெர்மனியிலுள்ள ஸ்குவெய்ன்பர்ட் (Schweinfurt), காப்லென்ஸ் (Coblenz), மெய்ன்ஸ் (Mainz) பிரதேசங்கள்.

எதிரிப் போக்குவரத்துகள், முனைகள், விமான நிலயங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

பாலங்கள், ஸப்ளை துவியல்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப் பின்.

உதவி.—பிரான்ஸிலும் (France), இதாலியிலும் (Italy), போரிடும் தரைப்படைகள்.

கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

இலக்குகள்—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

துறைமுகங்கள்.—ரிகா (Riga), லிபா (Libau).

ஜெர்மன் போக்குவரத்துகள்.—ரிகா (Riga) வளைகுடா.

இரவு.—இரும்புத் தொழிற்சாலை.—ரூரிலுள்ள போக்கம் (Bochum).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய முனைகள், ஸ்தாபனங்கள்.—*ரியுக்கியூ* (Ryukyu).

(12 *ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.* 26 *அநேகமாய் மூழ்கடிக்கப் பட்டிருக்கலாம்.* 89 *ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன*).

பர்மா (Burma).

போக்குவரத்துகள், இதர இலக்குகள்.—*டிடிம்* (Tiddim) *பிரதேசம்.*

பாலம்.—*லாஹியோவிற்கு* (Lahio) *அருகில்.*

பாலம்.—*நலாங்* (Nalong).

10—10—44. (*செவ்வாய்க்கிழமை*).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பாலம்.—*எஸ்க்கர்ச்சென்* (Euskirchen).

ராணுவ இலக்குகள்—*தென்மேற்கு ஜெர்மனி* (S. W. Germany).

ஜெர்மனியப் பாதுகாப்பு.—*ஆக்ஹெனிற்குள்* (Aachen).

ஜெர்மன் முனைகள்.—*ஸ்கெல்ட்* (Scheldt).

கப்பல்கள்.—*ஏட்ரியாடிக்* (Adriatic).

போக்குவரத்துகள்.—*வட இதாலி*(N. Italy).

இரவு.–ரயில் தளங்கள்-*விரோனு* (Verona).

தூரக்கிழக்கு (Far East).

தீவுகள்.—*ரியிக்யூ* (Ryukyu) *தொகுதி.*

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.–*பாலிக்பாபன்* (Balik Papan).

கப்பல்கள்.—*பிலிப்பைன்ஸ்* (Philippines).

பர்மா (Burma).

முகாம்கள்.—*பூதிடாங்கிற்கு* (Buthidaung) *தெற்கிலுள்ள கிராமங்கள்.*

ஜப்பானிய சைனியங்கள்.—*டிடிம்* (Tiddim), *சிண்ட்வின்* (Chindwin) *பிரதேசம்.*

ரயில்கள், நீராவி யந்திரங்கள்.—*மாண்டலே* (Mandalay), *நாம்டு* (Namtu) *லயன்களைச் சேர்க்கும் சந்திப்புகள்.*

11—10—44. (*புதன்கிழமை*).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—கப்பல்கள்—*நார்வே* (Norway).

தொழிற்சாலை இலக்குகள்.—*ரைன்லாந்திலுள்ள கொலோன்* (Cologne), *காப்லென்ஸ்* (Coblenz).

ஜெர்மன் சைனியங்கள்.–*ஸ்கெல்ட்* (Scheldt), *ஹாலந்து* (Holland), *ஆக்ஹென்* (Aachen).

அரண் கட்டப்பட்ட பிரதேசங்கள்.—*ஊஸ்ட்பர்க்* (Oostburg), *ஸ்லுயிஸ்* (Sluis), *ஸ்கூன்டிஞ்க்* (Schoondijke).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—*வால்செரன்*(Walcheren), *ஹாலந்திலுள்ள பிளஷ்ஷிங்* (Flushing).

ராணுவ இலக்குகள்.–*வியன்னாப் பிரதேசம்* (Vienna).

விமான நிலயங்கள்.—*ஆஸ்திரியா* (Austria), *ஹங்கேரி* (Hungary), *செக்கோஸ்லாவாக்கியா* (Czechoslovakia).

ஸப்ளை ஸ்தலங்கள்.-*வட இதாலி* (N. Italy).

கப்பல்கள்.—*ஏட்ரியாடிக்* (Adriatic).

இரவு.—ரயில் தளங்கள்—*வட இதாலி* (N. Italy).

பாலங்கள், ஸப்ளை ஸ்தலங்கள்.—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

பல இடங்கள்.—*மேற்கு ஜெர்மனி* (Western Germany), *பெர்லின்* (Berlin).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—*ஹாலந்திலுள்ள பிரெஸ்கென்ஸ்* (Breskens).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள்.—*பார்மோஸா* (Formosa).

ஜப்பானிய கப்பல்கள்.—*பார்மோஸா* (Formosa).

எண்ணெய்க் கிணறுகள்.—*பாலிக்பாபன்* (Balik Papan).

பர்மா (Burma).

எதிரி ஸப்ளை தளங்கள், எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள்.—*சிண்ட்வின்* (Chindwin) *பிரதேசம்.*

ரயில்வேப் பிரதேசங்கள்.—*மோல்மீன்* (Moulmein).

கப்பல்கள்.—*மார்ட்டாபன்* (Martaban) *வளைகுடா.*

12—10—44. (*வியாழக்கிழமை*).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.–விமான தொழிற்சாலைகள்–*பிரெமென்* (Bremen).

இதர இலக்குகள்.—*வடமேற்கு ஜெர்மனி* (North-west Germany).

துருப்புகள், முனைகள்.—*ஊஸ்ட்பர்க்* (Oostburg), *ஸ்லுயிஸ்* (Sluis), *ஸ்கூன்டிஞ்க்* (Schoondijke).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—*பிரெடெரிக் ஹென்ட்ரிக்* (Fort Frederick Hendrik) *கோட்டை.*

தரைப்படைகளுக்கு உதவி.—*ஆர்ன்ஹெம்* (Arnhem), *நிஜ்மேகன்* (Nijmegen).

போக்குவரத்துகள்.—*ஆக்ஹென்* (Aachen).

போக்குவரத்து இலக்குகள்.—*ஹாலந்து* (Holland).

ஜெர்மன் படகுகள்.—*ஏஜியன்* (Aegean).

விமான நிலயங்கள்.—*ஹங்கேரி* (Hungary).

ரயில் லயன்கள், கப்பல்கள், ரஸ்தா இலக்குகள்.—*ஆஸ்திரியா* (Austria).

போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள், தளவாடங்கள், ஸப்ளை ஸ்தலங்கள்.–*பொலாஞ* (Bologna) *பிரதேசம்.*

யுத்த தந்திர இலக்குகள்.—சைலீஷியா (Silesia), வியன்னு (Vienna).

இரவு.—இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany), ஹாம்பர்க் (Hamburg).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—பார்மோஸா (Formosa), பெஸ்கடோர்ஸ் (Pescadores), (396 ஜப்பானிய விமானங்கள், 63 கப்பல்கள், நாசமாக்கப்பட்டன).

பர்மா (Burma).

போக்குவரத்துகள், பாலங்கள்.—அரக்கான் (Arakan), மத்திய பர்மா (Central Burma).

13—10—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—உள் நாட்டுத் துறைகள்.—ஜெர்மனியிலுள்ள டூயிஸ்பர்க் (Duisberg).

பாலங்கள்.—மாயென் (Mayen), எஸ்கர்ச்சென் (Euskirchen).

ரயில் போக்குவரத்துகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

துருப்புகள், முனைகள்.—ஆக்ஹென் (Aachen).

ஜெர்மன் கப்பல்கள்.—பால்டிக் கடல் (Baltic Sea).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள் :—ஜெர்மனி (Germany).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—வட இதாலி (Northern Italy), ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary).

போக்குவரத்து இலக்குகள்.—பொலோனு (Bologna).

எதிரி இலக்குகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

துறைமுக ஸ்தாபனங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

இரவு.—சுரங்க வெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்கள்.

விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்.—பிலிப்பைன்ஸிலுள்ள லூஸான் (Luzon).

ஜப்பானிய ஸ்தலம்.—பார்மோஸாவில் உள்ள ஒக்கயாமா (Okayama).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—தென்மேற்குப் பஸிபிக்கிலுள்ள அம்பாய்னு (Amboina), ஸீரம் (Ceram).

ஜப்பானிய இலக்குகள்.—வீவாக் (Wewak), பிஸ்மார்க் (Bismarck), பொகெய்ன்வில்லி (Bougainville), ஷார்ட்லண்டு (Shortland) தீவுகள்.

பர்மா (Burma).

போக்குவரத்துகள் இதர ராணுவ இலக்குகள்.—அரக்கான (Arakan), மத்திய பர்மா (Central Burma).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

9—10—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England) ; லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

10—10—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

11—10—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து ; லண்டன் பிரதேசம்.

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

12—10—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து (South-eastern England)) ; லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

ருஷ்ய சைனியங்கள்.—பிரஷியன் (Prussian) எல்லைச்சரகம்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

13—10—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

14—10—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

சர்பராவும், வேகமும். 'D' தினத்தன்று ஆரம்பமாகி, பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸம்பர்க்கை விடுதலை செய்த நேசதேச முன்னேற்ற வேகம் அதன் உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. அடுத்த பாய்ச்சலுக்குத் தயார்செய்து கொள்ளுவதற்கும், பின்னணியிலிருக்கும் போக்குவரத்து மார்க்கங்களை பலப்படுத்துவதற்கும்,

ஜெர்மனியைத் தாக்க படைகளைக் குவிப்பதற்கும் யுத்தத்தில் சற்று அயர்வு ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் சர்பராக்களும், உதவிப் படைகளும் நார்மண்டியிலுள்ள செர்பர்க் துறைமுகத்திலிருந்து வந்தன. செர்பர்க்கை எதிரி அழித்துவிட்டானென்றும், அதை நாம் துரிதமாகச் சீர்படுத்தினேமென்றும் உங்களுக்குத் தெரியும். அவைகள் நிஜ்மேகன், ஆக்கன், மெட்ஸ் போன்ற வெகுதூரத்திலுள்ள இடங்களுக்குக் கொண்டுபோகப்பட்டன. சமீபத்தில் உள்ள ஆண்ட்வெர்ப் போன்ற துறைமுகங்களைப் பிடிக்க பிரயத்தனம் செய்யப்படுகிறது. நேசதேசப் படைகளின் முன்னேற்றம் சர்பராக்களின் மிகுதியைப்பொருத்தது. ஜெர்மானியர்கள் இதை அறிவார்கள். மாரிகாலம் அவர்களுக்கு யாதொரு உதவியையும் அளிக்காதென்றும் அவர்களுக்குத் தெரியவரும்.

வி வி வி வி வி

கடுமையான போர். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நேசதேசத்தாரின் முன்னேற்ற வேகம் தணிந்திருக்கிறதே ஒழிய நின்றுவிடவில்லை. தாக்குதலின் வலிமையும் குன்றிவிடவில்லை. இரவு பகலாக ஷெல்ட் நதிக் கரையிலும், ஆக்கன் கோட்டையிலும், வாஸ்கஸ் நதிப் பள்ளத்தாக்கிலும், கடும்போர்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. அதன் பயனாக ஆகன் தீக்கிரையாகிவிட்டது. தெருத் தெருவாகக் கடும்போர் நடைபெறுகிறது. நகரத்தின் நான்கில் மூன்று பாகம் வீழ்ச்சி பெற்றுவிட்டது. அதிலிருக்கும் பொது ஜனங்கள் அங்கிருந்து ஓடாமலிருப்பதற்கு ஜெர்மனியின் வெற்றியில் இன்னும் அவர்களுக்குள்ள நம்பிக்கை காரணமல்ல, மனஉறுதி பலமாக யிருப்பதுமல்ல. அங்கிருந்து ஓடினால் ஜெர்மனியிலுள்ள ஜெர்மன் ரகசியப் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளுவோமென்ற பீதிதான் காரணம். மேலும் ஜெர்மன் ரகசியப் போலீஸாரைவிட நேசதேசத்தாருடைய ஆக்கிரமணத்தில் அதிக கருணையை எதிர்பார்க்கலாமென்று அவர்கள் நம்புகிறார்கள்.

வி வி வி வி வி

மூன்று பக்கங்களிலிருந்து தாக்குதல். மூன்றுவதாக, ஒன்று, இரண்டு பக்கங்களிலிருந்து தாக்கியதுபோல விமானங்கள் இப்பொழுது மூன்று பக்கங்களிலிருந்து தாக்கிவருகின்றன. மேற்கு, கிழக்கு, தெற்கிலிருந்து தாக்குதல் நடைபெறுகிறது. ஜெர்மனியின் எந்த இடமும் பத்திரமாக இருக்கமுடியாது. முடிவான தாக்குதலுக்கு முற்போக்காக நடைபெறும் விமானத் தாக்குதலிலிருந்து பொதுமக்கள் எங்கு ஓடுவார்கள். அக்டோபர் 7-ம் தேதியன்று 3,000 வெடி விமானங்களும் 2,000 சண்டை விமானங்களும், அக்டோபர் 15-ம் தேதியன்று மேஸ்பர்க்கையும், சோர்பி அணையையும் 7,000 வெடி விமானங்களும் தாக்கின.

வி வி வி வி வி

பால்கன் நாடுகள். இதற்கு மாறாக பால்கன் போர்முனையில் அநேக சம்பவங்கள் துரிதமாக நடைபெறுகின்றன. ருஷ்யப் போர்முனை இப்பொழுது வடக்குக் கோடியிலுள்ள ஆர்டிக்கிலுள்ள மர்மான்ஸ்கிலிருந்து ஏட்ரியாடிக் வரையிலும் பரவியிருக்கிறது. டிட்டோவின் அனுமதியின்பேரில் செம்படை யூகோஸ்லாவியாவுக்குள் நுழைந்துவிட்டது. ருமேனியா, பல்கேரியப் படைகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டுவிட்டது. புதிய தாக்குதலின் மூலம் செம்படை ஹங்கேரியாவுக்குள்ளும், டிரான்ஸில்வேனியாவுக்குள்ளும் சென்றுவிட்டது. தெற்கு போலந்திலிருந்து செம்படை ஸ்லவோகியாவை அடைந்துவிட்டது. மத்திய ஐரோப்பாவிலுள்ள கார்பேதிய மலைகளிலுள்ள கணவாய்கள் கடக்கப்பட்டன. தற்காப்பு அரணைக் குறைத்துவிடுவதென்று ஜெர்மனி உத்தேசித்ததுபோக இப்பொழுது அது ஹங்கேரி, டிரான்ஸில்வேனியாவின் எல்லைச் சரகம் வரையிலும் தற்காப்புகளை அமைக்கவேண்டி நேரிட்டுவிட்டது.

வி வி வி வி வி

ரீகாவின் வீழ்ச்சி. ருஷ்யப் போர்முனையின் வடக்குக் கோடியில் லாட்வியாவின் தலைநகரமான ரீகா விழுந்துவிட்டது. இந்தத் துறைமுகத்தை இழந்தபின் ஜெர்மானியர்கள் மேற்கு பால்டிக்கில் ஆதிக்கத்தை இழந்துவிட்டார்கள். யுத்தத்துக்குமுன் ரீகாவும், லெனின்கிராடும்தான் வால்கா, நீடர் நதியின் அறுவடைகளை ஏற்றுமதி செய்யத் துறைமுகங்களாகயிருந்தன.

வி வி வி வி வி

கிரீஸின் விடுதலை. பல்கேரியா, ருமேனியாவின் துரோகத்தினால்தான் ஜெர்மனி கிரீஸை விட்டு வெளியேறும்படி நேர்ந்துவிட்டதென்று நாஸிகள் துக்கிக்கிறார்கள். இதில் சிறிது உண்மையிருக்கிறது. நேசதேசத்தாரின் தூண்டுதலின்பேரில் கக்ஷி மாறிவரும் பால்கன் நாடுகள் கிரீஸிலிருந்து ஜெர்மனி பின்

வாங்குவதைத் தவித்துவருகின்றன. ஜெர்மானியர்கள் கிரீஸிலிருந்து அவசர அவசரமாகத் தலைவிதி கோலமாக ஓடுகிறார்கள். அவர்கள் எதிர்த்துப் போராடவில்லை. சில நாட்களுக்குள்ளாக பெலப்பனிஸ் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. கிரீஸின் தலைநகரமான ஆதென்ஸ் விடுவிக்கப்பட்டது. கிரேக்கர்கள் வரவேற்கக்கூடிய உணவுப் பொருள்களும் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி

கருணைக் கப்பல்கள். ஏராளமான கப்பல்களில் வெற்றிக்குப் பேருதவி செய்ததும், அநேக கஷ்டங்களை அனுபவித்ததுமான கிரேக்கர்களுக்கு உணவுப்பொருள்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மன் குறவளைப் பிடிப்பு நீங்கியவுடன் பட்டினியால் வாடும் கிரீஸுக்கு ஏராளமான சர்பராக்கள் தேவைப்படுமென்று நேசதேசத்தார்கள் அநேக மாதங்களுக்குமுன் கண்டுபிடித்தார்கள். கிரீஸிலுள்ள துறைமுகங்களும், விமான தளங்களும் விடுவிக்கப்பட்டவுடன் தேவையான சாமான்களை இறக்க கப்பல்களும், விமானங்களும் தயாராக இருந்தன. மருந்துகளும், ஆடைகளும், உணவுப் பொருள்களும் இப்பொழுது குவிக்கப்படுகின்றன.

மத்தியதரைக்கடல் போர் பிராந்தியத்தில் உயர்தர சேனாதிபதியான ஸர் ஹென்ரி மெயிட்லாந்து வீல்ஸன் ஒரு பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்.

“இப்பொழுது இறுதி வெற்றி நிச்சயமாகிவிட்டது. அக்கிரமப் போரைத் தொடுத்தவர்கள் முறியடிக்கப்பட்டுவிட்டார்கள். இப்பொழுது எதிரியைத் துடைக்க நாம் வந்திருக்கிறோம். உங்களுடைய துறைமுகங்களையும், விமான தளங்களையும் உபயோகப்படுத்தி பின்வாங்கும் எதிரியை நாம் தொந்தரவு செய்வோம்”.

வி வி வி வி வி

ஹங்கேரி. ஹங்கேரியில் இந்த வாரத்தில் ருசிகரமான ஒரு நடவடிக்கை நிகழ்ந்தது. ஹங்கேரி சமாதான ஷரத்துக்களைக் கோரி வருகிறதென்றும், அதற்காக நேசதேசத்தார்களுடன் தொடர்பு ஏற்படுத்தி வருகிறதென்றும் சில நாட்களுக்கு முன் சொல்லப்பட்டது. ஹங்கேரியின் ரீஜண்டான அட்மிரல் ஹார்தி அச்சுநாடுகளின் கக்ஷி வெற்றி பெறாதென்று அறிந்து நேசதேசக்கக்ஷியில் சேர முயற்சி செய்தானென்று புலப்படுகிறது. இந்த முயற்சி பலன்படவில்லை. நாஜிகளின் அமுலுக்குள்பட்ட ஹங்கேரிய பாஸிஸ்டுகள் தலைநகரமான புடாபெஸ்டைக் கைப்பற்றி ஹார்தி நிர்வாகத்தை ஒழித்துவிட்டார்கள். ஹங்கேரியைக் காப்பாற்ற ஹார்தி செய்த பிரயத்தனத்தை துரோக புத்தியென்றும், ஹங்கேரியை போல்ஷீவிஸத்தினிடம் ஒப்படைக்க முயற்சியென்றும் சொல்லி, பயனற்ற போரை விடாது நடத்தும்படி ஸோல்ஜர்களைத் தூண்டுகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் ருஷ்யர்கள் புடாபெஸ்டைப் பிடித்துவிடுவார்கள். புடாபெஸ்டில் யுத்த நிறுத்தக் கக்ஷிக்கும், பாஸிஸ்டு அச்சுக்கக்ஷிக்கும் இடையே கலகம் உண்டாகிவிட்டது. அது வீழ்ச்சி பெற்றுவிட்டால் டான்யூப் நதியும், வியன்னாவுக்குப்போகும் மார்க்கமும் ருஷ்யப்படைகளுக்குத் திறக்கப்பட்டுவிடும்.

வி வி வி வி வி

கவசம் பூண்ட நேசதேச ஒற்றுமை. மிஸ்டர் சர்ச்சில் திடீரென்று மாஸ்கோவுக்கு வந்ததிலிருந்து அநேகருக்கு வியப்பு உண்டாகியிருக்கிறது. அநேகர்கள் ஊகித்துச்சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஆயினும் கியூபெக்கில் நடைபெற்ற மிஸ்டர் சர்ச்சில்-ஜனாதிபதி ரூஸ்வெல்டின் சம்பாஷணையின் முடிவுகளில் முக்கியமானவைகள் ஸ்டாலினுடன் விவாதிக்கப்பட்டனவென்று சொல்லலாம். எதிர்காலத்தில் உலக பத்திரத்துக்காக டம்பார்ட்டன் ஒக்ஸ் மகாநாட்டில் முடிவு செய்த தீர்மானங்களையும் ஸ்டாலின் அங்கிகாரம் செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. டம்பார்டன் ஒக்ஸில் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கும் ஸ்தாபனத்தின் முக்கிய அம்சம் யாதெனில், முன்னிருந்த சர்வதேச சங்கத்துக்கு அது சக்தியை அளித்திருக்கிறது. அதாவது நேசதேச சம்ஷ்டிக்கு அது ஆயுதங்களை வழங்கியிருக்கிறதென்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறார். பழைய சர்வ தேச சங்கமும் அநேக தேசங்களின் சம்ஷ்டிதான். ஆகிலும் அதன் உத்தரவுகள் சாவதானமாகவும், பயனன்னியிலும், அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. அதன் நடவடிக்கைகள் சமயோஜிதமற்றவை. விரோதங்கள் முற்றிச் சண்டை வலுத்தது. நிலைமை கட்டுக்கடங்காதபொழுது தான் சர்வதேச சங்கம் குறுக்கிட முயன்றது. புதிய ஸ்தாபனத்தாரிடம் ராணுவ அதிகாரிகள் கொண்ட ஒரு கமிட்டி இருக்கிறது. தலையிடுவது அவசியமென்று 11 தேசங்கள் அடங்கிய

சபை முடிவு செய்தவுடன் பலாத்காரத்தை துரிதமாக உபயோகிக்க அவர்களிடம் போதுமான படைகளிருந்துவரும்.

இந்தப் புதிய திட்டத்தின் மற்றொரு அம்சம் யாதெனில் உலகபத்திர பிரச்னைகளும், மற்ற சர்வதேச பிரச்னைகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சர்வதேச பிரச்னைகளைக் கவனிக்க தனிப்பட்ட ஜனசமூக, பொருளாதார சபை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த சபையின் முடிவுகளின் நியாயத்தை ஒத்துத்தான் உலக பத்திர சபை சர்வதேச விவகாரங்களில் தலையிட்டு பலாத்காரத்தை உபயோகிக்கக்கூடும்.

வி வி வி வி வி

போலந்து. மாஸ்கோவுக்கு மிஸ்ட்டர் ஈடனும், போலந்தின் தலைவரும், பிரதம மந்திரியும், அயல்நாட்டு மந்திரியும் வந்திருப்பதால் ருஷ்ய-போலீஷ் எல்லைச்சரக விவாதம் திருப்திகரமாக முடிவு பெறுமென்று எதிர்பார்க்கலாம். போலந்து விஷயமாக ருஷ்யாவின் மனப்பான்மையில் ஒரு சிறிது மாறுதல் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பிரிடிஷ் பிரதம மந்திரியின் செல்வாக்கிலிருந்து நல்ல பலன் கிடைக்குமென்பது நிச்சயம். அமெரிக்காவிலுள்ள ஜனாதிபதி ரூஸ்வெல்டும் அவருடைய அபிப்பிராயத்தை மாஸ்கோவுக்கு அறிவித்திருக்கிறார். அது பின்வருமாறு:—

"இந்த யுத்தத்தில் ஜெர்மனியை முறியடிக்கவேண்டுமென்ற ஒரே எண்ணம் மட்டும் அமெரிக்காவுக்கு இல்லை. இந்த உலகத்தில் நீதி முறைகளை ஸ்தாபிக்கத்தான் நாங்கள் போர் புரிகிறோம். போலந்து ஜனங்களைப்போல் எவரும் இந்த சுதந்திரத்தை சம்பாதிக்கவில்லை. அவர்களுக்கு உலகத்தார் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கடமையை அமெரிக்க மக்களாகிய நாங்கள் தீர்த்துவிடுவதாக உறுதிகொண்டிருக்கிறோம். போலீஷ் மக்களின் நியாயமான பாத்தியங்களை வழங்கும் வரையில் நாங்கள் திருப்தியடையப்போவதில்லை."

வி வி வி வி வி

பல்கேரியாவின் யுத்த நிறுத்தம். யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ருஷ்யாவும், பிரிடனும் அமெரிக்காவும் கையெழுத்து செய்தன. பல்கேரியாவும் அதை ஒப்புக்கொண்டுவிட்டது. ஷரத்துகளின் பிரகாரம் கிரீஸிலுள்ள பல்கேரியத் துருப்புகள் திருப்பி அழைக்கப்படும். யூகோஸ்லாவியாவிலுள்ள பல்கேரியப்படைகள் மார்ஷல் டிடோவின படைகளுடன் சேர்ந்து நின்று ஜெர்மானியர்களைத் துரத்தியடிக்க முயற்சி செய்யும்.

வி வி வி வி வி

நாஸிகளின் கொடுமைப் புராணம். நாஸிகள் ஆக்கிரமணம் செய்து இப்பொழுது விடுதலை பெற்ற நாடுகளில் பஞ்சமும், கஷ்டமும் தாண்டவமாடுகின்றன. ஆக்கிரமிப்பு ஹாலந்தில் உணவுப்பொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

அக்டோபர் 12-ம் தேதி வந்த ரிபோர்ட்டுப்படி மூன்று அல்லது நான்கு தினங்களுக்குள் உணவுப்பொருள் சேமிப்பு அற்றுப்போய்விடுமாம். இத்துடன் ஜெர்மானியர்கள் உணவுப்பொருள் ஏற்றுமதியை நிறுத்திவிட்டார்கள். பாக்கியுள்ள உணவுப்பொருள்களைத் தங்களுடைய உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

விடுதலை பெற்ற பிரான்ஸின் நிலைமையும் மோசமாகயிருக்கிறது. ஜெனரல் டிகால் பின்வருமாறு சொல்லுகிறார்.

போர்டோவைத் தவிர மற்ற துறைமுகங்கள் உபயோகத்துக்கு லாயக்கில்லாதவை. நமது போக்குவரத்து மார்க்கங்களும், இருப்புப்பாதைகளும் சீர்கெட்டுப்போய்விட்டன. நமது தொழிற்சாலைகளில் நிலக்கரியும், மின்சாரமும் காணப்படவில்லை. நமது சுரங்கங்கள் பாழாகிக்கிடக்கின்றன. நமது விவசாயக் கருவிகள் தேய்ந்து போயிருக்கின்றன. நம்மிடமுள்ள கரி, இயற்கைப் பொருள்களின் சேமிப்பு அழிந்துவிட்டது. இதுதான் இன்றைய ஐந்தொகைக் கணக்கு.

ஆகிலும் பிரான்ஸ் மனங்கலங்கிவிடவில்லை. அதனிடம் எஞ்சியுள்ள ரெயில்வே எஞ்சின்களையும், கப்பல்களையும், தளவாடங்களையும் அது நேசதேசத்தார் வசம் ஒப்படைத்துவிட்டது. நேசதேசத்தாரின் விரோதிகளை முறியடிப்பதில் அது உறுதிகொண்டிருக்கிறது. வெற்றிபெற இன்னும் அதிக பிரயத்தனம் தேவையென்று அதற்குத் தெரியும். இந்தோசைனாவையும் மீட்க அது தயாராக இருக்கிறது. பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குப்பின் அது ஜப்பானுடன் போர் தொடுத்திருக்கிறது. ஜப்பானைத்தாக்க அது சாம்ராஜ்யத்திலுள்ள பிரெஞ்சுக்காரர்களில் 40 சத. விகிதத்தைச் சேர்த்து ஒரு படையைத் திரட்டியிருக்கிறது.

பின்லாந்தின் பரிதாபகாமான நிலைமை. ஜெர்மானியர் வசமிருந்த பொழுது பின்லாந்தும் அநேகக் கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறது. அது ஜெர்மனியுடன் மூன்று வருடங்களாக உறவாடி வந்தபோதிலும், பின்வாங்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட ஜெர்மானியர்கள் இப்பொழுது நாடுகளையும், நகரங்களையும் தீக்கிரையாக்கி வருகிறார்கள். ஹைரின்ஸால்மி என்ற கிராமத்தில்ல் மாதாக் கோவிலைத்தவிர பாக்கி ஒரு பூண்டுமிருக்கவில்லை. அதன் ஜனங்கள் வீடுவாசலன்னியிலும், சொத்து சுகங்களன்னியிலும், ஜீவனோபாயம் இல்லாமலும் மறைந்து விட்டார்கள். தப்பி ஓடிவந்த ஒருவர் பின் வருமாறு சொல்லுகிறார்.

50 மைல்கள் வரையில் பின்னிஷ் குடியிருப்புகளும் தீக்கிரையாகிவிட்டன. வீடுகளின் புகைபோக்கிகள் மட்டும் நாஸிகளின் அக்கிரமங்களுக்கு ஞாபகார்த்தமாக நின்றுகொண்டிருக்கின்றன.

வி வி வி வி வி

ஜெர்மன் உள்நாட்டில். (1) ஹிட்லர் வசிக்கும் பெர்ச்கெஸ்காடனைப் பலப்படுத்த 45,000 தொழிலாளர்கள் வேலைசெய்து வருகிறார்கள். அவர்கள் ஹிட்லர் அநேககாலம்வரை போர் புரியக்கூடியவகையில் குகைகளையும், சுற்றிச் சுழலும் மார்க்கங்களையும் அமைத்து வருகிறார்கள்.

(2) ஜெர்மனியின் கோச நிபுணரான டாக்டர் ஷாட் காவல்முகாமில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

(3) பீல்ட்மார்ஷல் ரோமல் இறந்தார்.

(4) ஜெர்மனி முறியடிக்கப்பட்டு, நேசதேசத்தார்கள் யுத்தக் குற்றவாளிகளை பரிசீலனை செய்யும்பொழுது, பதில் நடவடிக்கைகளை ஆரம்பிக்க மார்ஷல் கோயரிங் தயார் செய்து வருகிறார். கோயரிங்கின் கபடமான சூழ்ச்சி யாதெனில் பெல்ஜியத்தின் மன்னர் லெபால்ட், டென்மார்க்கின் மன்னரான கிருஸ்டியன், போலந்தின் ஜெனரல் போர் போன்ற முக்கியஸ்தர்களை பிணையாளிகளாகக்கொண்டு, அவர்களை ஜப்பானுக்கு அனுப்பி அங்கிருந்து நேசதேசத்தார்களிடமுள்ள நாஸி பிரமுகர்களுக்குப் பதிலாக பரிவார்த்தனை செய்து கொள்ளுவது.

(5) நாஸி மத்திய நிலயத்தின் தலைவரான போர்மான் நாஸி உத்தியோகஸ்தர்களின் தன்னல மறுப்பையும், தியாகத்தையும் சிலாகித்துப் பேசுகிறான். அவர்கள் ஏராளமான ஊதியம் பெற்றவர்கள். நல்ல உத்தியோகங்களை வகிப்பவர்கள் அவர்கள் ஜனங்களைத் துன்புறுத்திவிட்டு போர்முனைக்குச் செல்லாமலே பதக்கங்களையும், கௌரவ அடையாளங்களையும் அணிந்துகொண்டு ஆடம்பரமாகத் திரிகிறார்கள். அவர்களுக்கு இனிமேல் அதிகச் சம்பளம் கிடையாதென்றும், புதிய நியமனங்கள் கிடையாதென்றும் புதிய கௌரவ அடையாளங்களும் வழங்கப்படமாட்டா வென்றும் போர்மான் உறுதிகூறிவிட்டான்.

(6) கோயபல்ஸ் புழுக ஆரம்பித்துவிட்டான். இரண்டு உதாரணங்களைக் கூறுவோம்.

(a) நாங்கள் மற்ற தேசங்களில் தவறான கொள்களைப் பரவச் செய்யவில்லை. ஆரம்பமுதல நாங்கள் யோக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். தேசங்களைக் கைப்பற்ற வேண்டுமென்ற வெறிபிடித்தவர்களைப்போல் நாங்கள் அயல் நாடுகளைப் பிடிக்க முயலவில்லை. எங்களுடைய எல்லைச் சாகத்தைத் தாண்டிச் செல்லவேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. புதிய உலக அமைப்பையும், புதிய நீதிமுறைகளையும் வழங்க நாங்கள் முற்பட்டோம். எதிரிகளைப் போல் வெறுப்பை போதிக்கக்கூடிய மேற்கோள்களை நாங்கள் பிரசாரம் செய்யவில்லை. பிரிடனை அழித்துவிடுவதென்றும், பிரான்ஸை சிக்ஷிப்பதென்றும், ஹாலந்தை அடிமைப்படுத்துவதென்றும், மற்ற எந்த தேசத்தையும் கவருவதென்றும், மற்ற தேசங்களின் ஐச்வரியத்தைக் கொள்ளையடிப்பதென்றும் நாங்கள் எண்ணம்கொள்ளவில்லை. (இவ்வளவு பொய்களை இவ்வளவு சுருக்கமாக இதற்குமுன் எவரும் சொன்னதில்லை). பத்திராதிபர்.

(b) பிரான்ஸில் முன்னேறுவதின் மூலம் ஜெர்மன் மனஉறுதியை குலைத்துவிடுவதென்று நம்பி பிரிடனும், அமெரிக்காவும் மோசம் போய்விட்டார்கள். (மேற்குப் போர் முனையின் நகரத்திலுள்ள தொழிலாளர்களுக்குச் செய்த பிரசங்கத்தின் குறிப்புகள் தொழிலாளர்களின் மனஉறுதி குலையாமலிருந்தால் இவ்விதமாகப் பேசவேண்டிய அவசியமென்னவென்று புலப்படவில்லை.—பத்திராதிபர்).

நாஸிகளைவிட்டு ஓடுவது. ஜெர்மன் கக்ஷியிலிருந்து விலகிக்கொள்ளும் நடவடிக்கை அதிகரித்து விட்டது. டெயிலி டெலகிராப்பில் கீழ் கண்ட விவரங்கள் காணப்படுகின்றன :—

(1) ஸ்தானிகர் காரியாலயத்திலுள்ள பத்திரிகை ஆசிரியரான டாக்டர் பால் கிராஸ் மான், (2) கடற்படை ஆபீஸரான காப்டன் பால் வான் வாலர்ட், (3) வியாபார தூதரான ஹேய்ன்ரிக் ரின்ஸ்பர்க் முதலியவர்கள் விலகிக் கொண்டுவிட்டார்கள்.

அயல்நாட்டு ஸ்தானிகர் காரியாலயத்திலுள்ள ஹான்ஸ் தாம்ஸனுக்கு ஆபத்து உண்டாகிவிட்டது. அதன் காரியதரிசியான பாலியன் எரிகாவெண்ட் மறைந்துவிட்டான். அதைச் சேர்ந்த ஹான்ஸ் ஷ்னேபர் வேலையை ராஜினமாச் செய்துவிட்டான். ஜெர்மன் வியாபாரச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் லிதாப் ஸ்வீடனில் அடைக்கலம் புகுந்துகொள்ள அனுமதிச் சீட்டுக்கு மனுச் செய்துகொண்டிருக்கிருன்.

வி வி வி வி வி

தூரக்கிழக்கு. (1) இங்கு மகத்தான சம்பவங்கள் நடைபெறுகின்றன. பார்மோஸாவை விமானங்கள் தாக்குவதைப் பார்த்தால் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவதற்குமுன் ஐரோப்பாவில் நடைபெற்ற விமான நடவடிக்கைகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

(2) மேற்குப் போர்முனையிலுள்ள விமானப்படைத் தலைவரான சீப் மார்ஷல் ஸர் டிராபோர்ட் லே மாலரி தெற்கு ஆசியா விமானப்படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிருர். நார்மண்டி கடற்கரைகளில் பாலேயிலும், ஸெயிண்ட் லோவிலும், ஸேன் நதியிலும் அவர் ஜெர்மன் சேனைகளை நொருக்கி, அவர்களை முதுகுகாட்டி ஓடும்படி செய்தார்.

வி வி வி வி வி

போர்ச்சுகலுக்குச் சொந்தமான டிமோர் தீவு. போர்ச்சுகல் ஜப்பானுடன் போர் தொடுத்துவருமென்று பயந்து போர்ச்சுகீஸ் டிமோரைக் காலிசெய்து விடுகிருமென்று ஜப்பான் போர்ச்சுகலுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுவதாகச் சொல்லிவிட்டது. இது மிகவும் முக்கியத்துவமுள்ளது. ஜப்பானுக்கு வெற்றிகள் கிடைத்தபொழுதும் ஆஸ்திரேலியா போரில் படையெடுக்க வேண்டுமென்று ஜப்பான் எண்ணம் கொண்டிருந்தபொழுதும் டிமோரை பாய்ச்சல் ஸ்தலமாக உபயோகிக்க வேண்டுமென்று எண்ணம்கொண்டு அது நடுநிலைமை வகித்துவந்த போர்ச்சுகலுக்கு சொந்தமான டிமோரைக் கைப்பற்றிற்று. ஆஸ்திரேலியாவிலிருந்து வெகுதூரம் விரட்டியடிக்கப்பட்டாலும் தன்னுடைய பத்திரத்தை உத்தேசித்தும் ஜப்பான் இப்பொழுது அதன் மனப்பான்மையை மாற்றிக்கொண்டுவிட்டது.

ஹாலந்தில் நேசதேசத்தாரின் முன்னேற்றம்.

ஆகாயப்படையின் இரண்டு தாக்குதல்கள்.

(டைம்ஸ் பத்திரிகை.)

ஜெர்மன் படை வரிசைகளுக்குப்பின் இரண்டு தாக்குதல்கள் செய்யப்பட்டனவென்று வெளிவந்தது. இது நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட யுத்த தந்திரத்துக்கு விமானப்படை செய்துவரும் அரிய செயல்களில் ஒன்ருகும்.

ஸெப்டம்பர் மாதம் 23-ம் தேதியன்று கனமான வெடிவிமானங்கள் டார்ட்மண்ட் கால்வாயின்பேரில் 12,000 ராத்தல் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டன. விமானங்கள் ஐரோப்பாவின் உள்நாட்டு ஜலாசயங்களில் உன்னதமாகக் கட்டியிருக்கும் அணைகளைக் கண்டுபிடித்து பயன்படுத்திக்கொண்டன. ரஸ்தாக்கள் வழியாகச் செல்லும் பிரயாணிகள் அந்தப் பாலத்தின் பேரில் செல்லும் படகுகளை அண்ணாந்து பார்க்கக்கூடும். குறிப்பான இடத்தை அவைகள் தாக்கியதால் வெடிவிமானங்கள் கால்வாயின் கரைகளை நொருக்கிவிட்டன. அதன்மூலம் நிலங்களுக்கு தண்ணீரை இட்டுச்சென்ற ஓடைகள் எல்லாம் வரண்டுபோய்விட்டன. அதன்மூலம் ஜெர்மன் ராணுவத்துக்கு அனுப்பப்பட்ட சர்பராக்களின் ஸப்ளை எவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டதென்று மதிக்கமுடியாது. அந்தக் கால்வாய் வழியாகத்தான் ரூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் எம்ஸுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்து மற்ற கால்வாய்கள் வழியாக கிழக்கு நோக்கிச் சென்று மாக் டீ பர்க்குக்கும், பிரெமனுக்கும் கொண்டுபோகப்பட்டன. அல்லது அவைகள் கடற்கரை வரையிலும் கொண்டுபோகப்பட்டு அங்கிருந்து கடற்கரை ஓரமாக வேறுவழியில் அப்புறப்படுத்தப்பட்டன. பாம்பர் படைகளின் இந்தத் துணிவுகரமான நடவடிக்கை கிழக்குப் போர்முனையிலுள்ள நமது நேசநாடுகளுக்கு உபயோகமுள்ளதாகயிருக்கும்.

இரண்டாவது விமான நடவடிக்கை பகட்டானதாக இல்லாவிட்டாலும் அதன் விளைவுகள் அபாரமானவை. வால்ச்சேரன் என்ற தீவு ஒருகாலத்தில் சமுத்திரத்தில் மூழ்கியிருந்தது. அதை மேற்கில் காப்பாற்றிவரும் அணைகளை உடைத்தபின் தீவு பூராவிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. விஷுமண்டலத்திற்குறிய வசந்தகால ஜலப்பெருக்கு ஏற்படும் சமயத்தில் இந்த உடைப்பு ஏற்பட்டதால் எங்கு பார்த்தாலும் அதிக வெள்ளப் பெருக்கு உண்டாகிறது. வால்ச்சேரன் ஜெர்மனிக்கு அதிக ராணுவ முக்கியத்துவமுள்ளது. ஏனெனில் அங்கிருந்து ஆண்ட்வெர்ப் வரையிலுள்ள இங்கிலீஷ் கால்வாயின் கடற்கரையை கண்காணிப்புச்செய்துவரலாம். அதன்மூலம் அநேகமாகப் பழுதுபடாத ஒரு துறைமுகம் நேசதேச வசமாகாமலும் செய்துவிடலாம். ரைன் நதியிலுள்ள தற்காப்புகளைத் தாக்கும் நடவடிக்கையில் அந்தத் துறைமுகம் நேசதேசத்தார்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதாகயிருக்கும். ஆகிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதிலிருந்து வால்ச்சேரனின் ராணுவ முக்கியத்துவம் போய்விட்டதென்று நினைக்கவேண்டாம். ஆண்ட்வெர்ப் கால்வாய்க்கு எதிர்க்கோடியிலுள்ள பூமிதான் தாழ்ந்த பிரதேசம். இது வெள்ளத்தில் மூழ்கியிருக்கும். கால்வாய்க் கரையை ஒட்டி ப்ளஷிங் துறைமுகத்தைச் சுற்றியுள்ள உன்னதமான அணைகள் வசந்தகால ஜலப்பெருக்கை சமாளித்து நிற்கும். குறைந்தபக்ஷம் இரண்டு மைல்கள் அகலமுள்ள பூபாகமாவது எதிரிவசமிருக்கக் கூடும். அந்தத் தீவின் மேற்குப் பக்கத்தில் கடலை நோக்கி வைக்கப்பட்டிருக்கும் கனமான பீரங்கிகள் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கக்கூடும். திடீரென்று குறுகிய பிரதேசத்தையுடைய அந்தத் தீவைத் தற்காப்பு செய்ய ஜெர்மனி செய்திருந்த திட்டங்கள் தட்டுக்கெட்டுப்போய் விட்டன.

இந்த முக்கியமான, சிறிய வெற்றியை நாம் கொண்டாடும்பொழுது வால்ச்சேரனிலுள்ள ஜனங்களின் கதி என்னவென்று பார்க்கவேண்டும். அவர்களின் ஜீவனத்துக்கு ஆஸ்பதமாகயிருந்த வயல்கள் தண்ணீருக்குள் மூழ்கிவிட்டன. அவர்களுடைய முன்னோர்கள் சாமர்த்தியமாகவும், அதிக பிரயாசையின் பேரிலும் அந்த பூமிகளைத் தயாரித்திருக்கிறார்கள். பொதுப் படையாக முன்கூடியே அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதனால் அதிக உயிர்சேதம் ஏற்படவில்லை. தேசத்தின் விடுதலைக்காக வீடு வாசல்களை இழந்த அந்த ஜனங்கள் மறுபடியும் வீடு வாசல்களை இழந்துவிட்டார்கள். அவர்களின் பிரதம மந்திரி சமீபகாலத்தில் அவர்களிடம் அனுதாபம் காட்டி, அவர்களின் தைரியத்தைப் பாராட்டி அனுப்பிய ஒலிபெருக்குச் செய்தியை எல்லா நேசதேசத்தார்களும் ஆமோதிக்கிறார்கள்.

ஹிட்லருக்கு அஸ்தமன காலம்.

(டெய்லி ஹெரால்ட் பத்திரிகையின் ராஜ தந்திர நிருபரான W. N. யூயர்).

ஹிட்லரின் கதி என்ன? இது வரையில் நாஸிக்கட்சிக்குத் தலைவர் இல்லாமல் இருந்ததில்லை. ஹிட்லர் ஜனங்கள்முன் வெளி வரவில்லை. அவன் பேசவும் இல்லை.

ஹிம்லரும், கோயபல்ஸும் தற்காப்புகளையும் படைதிரட்டுவதையும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். தேசபிமானம் வேண்டுமென்று வேண்டுகோள் செய்கிறார்கள். அலக்ஷியமாக இருக்கிறவர்களைப் பயமுறுத்துகிறார்கள். 'டி' தினத்திற்குப்பின் ஹிட்லர் ஒரு தடவை தான் பேசியிருக்கிறான். அதாவது அவனைக் கொலை செய்ய சதி செய்ததில் தப்பிவிட்டேன் என்று சொல்ல ஒலிபரப்பில் அவன் பேசினான். உள்நாட்டுப் படையின் தலைவராக ஹிம்லரையும், பூரணமான படை திரட்டுவதற்காக கோய்பல்ஸைப் பொறுப்பாளியாகவும் நியமிக்கும்படி அவன் உத்திரவிட்டான். இரண்டு வாரங்களுக்குப் பின்பு தான் தெய்வாதீனமாக தப்பிப் பிழைத்ததைப்பற்றி சேனையின் அதிகாரிகள் கூட்டத்தில் பேசினான். இது ஆகஸ்ட் 3-ம் தேதி அன்று நடந்தது. அதன் பின் ஒரு சப்தமும் கேட்கவில்லை. ஹிட்லர் மறைந்துவிட்டான் என்று தோன்றுகிறது.

இறுதிப் போருக்கு ஜெர்மனியின் பூராபலத்தையும் திரட்டுவதில் ஹிட்லர் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளாததுடன் புதிய தலைவர்கள் அவனைப் பற்றியே பிரஸ்தாபிக்கவில்லை. தாங்களே உத்தரவுகளை பிறப்புவிக்கிறார்கள். வேண்டுகோள்களை விடுகிறார்கள். ஹிட்லரைப் பற்றி ஏதாவது ஒரு சமயம் தான் குறிப்பிடுகிறார்கள், மேற்கு ஜெர்மானியர்களுக்கு செய்தி அனுப்பிய பொழுது கோயபல்ஸ் ஹிட்லரைப்பற்றி பிரஸ்தாபித்தான்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு சொற்பொழிவின் விஷயமும் ஹிட்லரின் பேரையும், கீர்த்தியையும் பற்றிப் புகழ்ந்தது ஜெர்மனியில் பிறப்புவிக்கப்படும் உத்தரவுகளும், முடிவுகளும் அவருடையதென்று சொல்லிவந்தார்கள். அந்த காலம் மாறி இப்பொழுது ஹிட்லருக்கு அஸ்தமனம் ஏற்பட்டுவிட்டது.

லெபால்ட் மன்னர் பிணையாளாக இருப்பார்.

யுத்தக் குற்றங்களிலிருந்து தப்பிக்க நாஸிகளின் திட்டம்.

(டெயிலி மெயில் பத்திரிகை).

ஜெர்மன் யுத்தக் கைதிகளை தூக்கிலிடுவதாக நேசதேசத்தார் சொல்லி வருவதற்கு பெல்ஜியத்தின் மன்னரான லெபால்ட்டையும் அவருடைய குழந்தைகளையும், டென்மார்க்கின் மன்னரான கிருஸ்டியனையும், ஜெனரல் போரையும் பிணையாள்களாக வைத்துக்கொள்வோம் என்று ஜெர்மனி பகிரங்கமாக பயமுறுத்தி வருகிறது என்று ஸ்டாக்ஹோமிலுள்ள டெயிலி மெயில் பத்திரிகையின் விசேஷ நிருபர் எழுதியுள்ளார்.

இந்தத் தகவலை ஜெர்மனியிலுள்ள மார்ஷல் கோயரிங் நடத்தும் எஸ்ஸென் நாஷனல் ஸீடங் என்ற பத்திரிகை வெளியிட்டது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் தோல்விக்குப்பின் யுத்தக் குற்றவாளிகளை விசாரணை செய்வதாக உத்தேசித்திருப்பதற்கு நாஸித் தலைவர்கள் பதில் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யப் போகிறார்கள். ஜெர்மனியில் கைதிகளாக உள்ள கியாதிபெற்ற அநேகர்களில் முகான்மையாக உள்ளவர்கள் பிணையாள்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் ஜப்பானுக்குக் கொண்டு போகப்பட்டு அங்கிருந்து நேசதேசத்தார் கைது செய்திருக்கும் நாஸிகளுக்குப் பதிலாக பரிவர்த்தனை செய்யப்படுவார்கள்.

ஸ்வீடிஷ் தினசரிப் பத்திரிகையான மார்கன் டிட்னிஞ்ஜனின் பெர்லின் நிருபர் வார்ஸாவில் கைது செய்யப்பட்ட போலிஷ் தலைவரான ஜெனரல் போர் கோமோரோஸ்கி ஒரு பிணையாளாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறாரென்றும், வருங்காலத்திய ஜெர்மனியின் திட்டத்தில் அவர் முக்கியமான பங்கெடுத்துக்கொள்வாரென்றும் சொல்லுகிறார். அவரைக் கைது செய்ததைப் பற்றி பெர்லினில் அதிக குதூகலம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் ஆக்கிரமிப்பு நாடுகளில் போலந்தை மிகவும் துன்புறுத்தி இருக்கிறோம் என்று நாஸித்தலைவர்கள் அறிவார்கள். ஜெர்மன் சேனை ஒழிந்த பின் போலிஷ்காரர்கள் ஜெர்மானியர்களை மிகவும் கடுமையாக சிக்ஷிப்பார்கள் என்றும் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

ஹிம்லரின் மனப்பான்மை.

கொடுங்கோன்மையின் அவதாரம்.

(மான்செஸ்டர் கார்டியன்.)

வால்டேர் சொல்லுகிறபடி கோபாவேசத்தின் காரணமாக ஜெர்மனியில் தலைமை வகிக்கும் பகட்டான நபர்களில் ஹிம்லர் மிகவும் அழகானவர்; ஆகிலும் வெறுக்கப்படக்கூடியவர். இந்தச் சிறிய வெளுத்த முகமுள்ள ஆசிரியர், அழகற்றவர், கண்களில் ஜோதியற்றவர், ஆயிரக்கணக்கான ஜனங்களின் வாழ்க்கையை அடக்கியாண்டு வருகிறார். அவருக்கு ஒரு லக்ஷியமும் கிடையாது. புரக்ஷி செய்யும் ஆர்வமும் அவரிடமில்லை. தயையின்மை உருவெடுத்தது போன்றவர். அதிகாரத்தைத்தான் வகிக்கவேண்டும், கொடுமைகளை இழைக்கவேண்டுமென்பதுதான் அவருடைய ஆத்ம திருப்தி.

அவருடைய மனோநிலைமையை அவருடைய சொற்பொழிவிலிருந்து அறிந்துகொள்ளலாம். அவருடைய அபிப்பிராயமும், அவருடைய நடவடிக்கையும் ஒன்றுபட்டிருக்கின்றன. இந்த நீண்ட சொற்பொழிவில் அவர் ஒன்றையும் ஒளித்துச் சொல்லவில்லை. அவருடைய இழிவான அபிப்பிராயம் பின்கண்ட வாக்கியத்திலிருந்து புலப்படும். அவர் சொல்லுகிறார். "ஒவ்வொரு நாளும் ஐரோப்பாவில் நடைபெறும் ஒவ்வொரு தாக்குதலும், ஒவ்வொரு படுகொலையும், ஒவவொரு வதையும், ஒவ்வொரு குற்றமும் எனக்கு அறிவிக்கப்படும். ஆகையினால் தான் அவசியமானபொழுது கடுமையாகவும், இரக்கமன்னியிலும் தண்டனை விதிக்கப்படவேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன்."

தயாளத்வமில்லாத கோஷ்டியான ஜெர்மன் படைத் தலைவர்களின் சமாஜத்தில் பேசும் பொழுதும், அவர்கள் இன்னும் அதிகமான கொடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று அவன் வற்புறுத்துகிறான். "சகோதரத்வம், அபத்தமான இரக்கம், கோழை நெஞ்சம், தப்பு சமாதானம் முதலியவற்றை மறந்துவிட்டோமென்று நாம் பிரதிக்ஞை செய்து கொள்ளவேண்டும்.

சரித்திரத்தில் இவ்விதமான கொடுங்கோன்மை உருவெடுத்த துராத்மா இதுவரையில் தோன்றியதே இல்லை.

ஜெர்மன் தொழிலபிவிருத்தியைக் கட்டுப்படுத்துவது.

சமாதானத்துக்கேற்பாடு செய்கிறவர்களின் பிரச்னைகள்.

(டைம்ஸ் பத்திரிகை).

கடுமையான சமாதான ஷரத்துக்களையோ, அல்லது தாராளமான ஷரத்துக்களையோ ஏற்படுத்துவது என்று முடிவு செய்யவேண்டுமென்று சொல்லும் தவறுன அபிப்பிராயத்தை மிஸ்ட்டர் ஈடன் அங்கீகாரம் செய்யவில்லை. இன்று எவ்விதமான திட்டம் சாத்தியமானது நியாயமானதென்ற கடிமையான பிரச்னை இப்பொழுது இல்லை. வருங்காலத்தில் காணப்படக்கூடிய சந்நிவேசங்களை ஒட்டி சர்வதேசங்களும் எவ்வகைப்பட்ட திட்டத்தை அமைத்து, அதை பரிபாலிக்கக் கூடுமென்பதுதான் முக்கியமான பிரச்னையாகும்.

சமாதானத்தை நிறுவுகிறவர்கள் அநேக காலமாக கொடுமைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்து சீர்கேடடைந்திருக்கும் தற்போதுள்ள ஜனங்களின் க்ஷேமத்துக்குப் பொறுப்பாளிகள் என்பதுடன் சமாதானத்தை எதிர்காலத்தில் பரிபாலிக்கக்கூடிய சந்ததியார்களுக்கும் அவர்கள் டிரஸ்டிகளாகயிருக்கிறுர்கள். இதுதான் அவர்களின் பூரா ஜவாப்தாரித்வம்.

ஐரோப்பாவில் பிரிடனின் கொள்கைக்கு பிரிடிஷ்—ருஷ்ய நட்புதான் அஸ்திவாரம் போன்றது. இது யுத்த அவசியத்தை முன்னிட்டுத் தோன்றியதல்ல. யுத்தத்திற்குப் பின் ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய நிலமையையும் அடிப்படையாகக்கொண்டது. பிரிடனும், ருஷ்யாவும் ஐரோப்பாவின் மேற்கு, கிழக்குக்கோடிகளில் நிலைபெற்றிருக்கின்றன. ஐரோப்பாவில் ஆதிக்கம் பெறவேண்டுமென்று அவர்களுக்கு எண்ணமில்லை. இரு நாடுகளுக்குள்ளும் பிளவு ஏற்பட்டால் ஐரோப்பா அந்நாடுகளுக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடும். ஆகையால் ஐரோப்பா சம்பந்தப்பட்டமட்டில் பொதுவான ஒரு கொள்கையை இரு நாடுகளும் கடைப்பிடிக்கவேண்டும். இருநாடுகளுக்குமிடையே ஒற்றுமையில்லாவிடில் ஜெர்மனியை அடக்கி ஆளுவது சாத்தியமில்லை. இதைத்தான் ஜெர்மன் பிரசாரர்கள் நன்கு அறிந்து பிரசாரம் செய்துவருகிறுர்கள்.

ஆனுல் ஒற்றுமை உருவான, முற்போக்கான கொள்கைகள் மூலம்தான் பரிபாலிக்கப்படவேண்டும். அடக்கு முறைகள் எல்லாம் தாத்காலிகமானவை. இந்த நடவடிக்கை பாதகமாக இருக்குமேயல்லாது யாதொரு வகையிலும் உபயோகமுள்ளதாக இருக்காது. நாசம் செய்யும் முறைகளும் குறுகிய நோக்கமுள்ளவை. முடிவான நடவடிக்கையுமல்ல. மேலும் பலமான ராணுவ ஆக்கிரமிப்பும் நிகுதியில்லாமல் நீடித்திருக்கமுடியாது. ஐரோப்பிய சமாஜத்தில் ஜெர்மனியின் எதிர் கால நிலைமையை வரையறுத்துத் தீர்மானம் செய்யக்கூடிய நீண்ட நோக்கமுள்ள திட்டங்களை நிறுவுவதில்தான் இப்பொழுது பிரிடனும், அதைச்சேர்ந்த பிரமுகர்களான நேசநாடுகளும் கவனம் செலுத்தவேண்டும்.

இந்த திட்டங்கள் கட்டுப்பாட்டு முறை, சீர்திருத்த முறை என்று இருவகைப்படும். முதலாவதாக, ஜெர்மனி மறுபடியும் அக்கிரமப் போரைத்துவக்காமல் பலமாகவும், நிரந்தரமாகவும் உத்தரவாதம் செய்யப்படவேண்டும். ஐரோப்பாவின் புனருத்தாரணத்துக்கும், ஐரோப்பிய ஜனங்களின் பொருளாதார க்ஷேமத்துக்கும், தைரியத்திற்கும் ஜெர்மனியும் பேருதவி செய்யக்கூடியவகையில் ஜெர்மனிக்கு உதவி செய்வதுதான் இரண்டாவது லக்ஷியம். இரண்டும் ஒன்றை மற்றென்று அவலம்பித்திருக்கின்றது. பத்திரமில்லாமல் சீர்திருத்தம் ஏற்படமுடியாது. ஆகிலும் சீர்திருத்தத்திற்குறிய உருவான திட்டங்களில்லாவிட்டால் சிக்ஷை விதிப்பதும், அடக்குமுறையும் கூடிய சீக்கிரத்தில் முறிபட்டுவிடும்.

எதிர் காலத்தில் ஜெர்மனியின் அக்கிரமப் போரைத் தடுக்கவேண்டுமென்றுல் முக்கியமாக நமக்கு பலம் மிகுதியாகயிருக்கவேண்டும். அதை நாம் பிரயோகம் செய்யவும் தயாராகயிருக்க வேண்டும். இன்னும் அடுத்த வருஷத்திலும், அடுத்த தலை முறையிலும் அதை உபயோகிக்க நாம் தயாராக இருக்கவேண்டும். அடுத்தபடியாக அந்த சக்தியை வெற்றிகரமாக உபயோகிக்கக்கூடிய வகையில் அடக்குமுறைகளையும், இதர நடவடிக்கைகளையும் நாம் கையாளவேண்டும். யுத்தத்துக்குப்பின் உடன் காலத்தில் இந்த இன்றியமையாத முறைகளை ஸ்தாபிக்க வேண்டியதுதான் முக்கியமான வேலையாகும். சக்தியை உபயோகிப்பதில் குந்தகம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளக்கூடாது. முக்கியமான நடவடிக்கைகளாவன, ராணுவ, பொருளாதார சம்பந்தமுள்ளவை. கேந்திர ஸ்தானங்களை ஆக்கிரமித்து அவைகளைக் குறைவான மனிதபலத்துடன் பரிபாலித்துவருவது. ஜெர்மனியின் முக்கியமான தொழிற்சாலைகளை பலமான கட்டுப்பாடுக்குட்படுத்தி ஜாக்கிரதையுடன் கண்காணிப்பு செய்வது.

கட்டுப்பாடு முறைகளைத் தவிர ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் ஒரு அம்சமாக ஜெர்மனியின் பொருளாதாரத்தைத் திருத்தியமைக்கவும் நாம் பிரயாசை எடுத்துக்கொள்ள

வேண்டும். ஜெர்மன் தொழிற்சாலைகளை கட்டுப்படுத்தி, பராமரிவைக்குட்படுத்துவது பத்திரத்துக்கு இன்றியமையாதது. முன்னேற்றத்துக்குறிய லக்ஷியம் அதில் காணப் படாவிட்டால் அது பிரயோஜனமில்லாமல் போய்விடும். யுத்தத்தினால் அழிவுற்றிருக்கும் ஐரோப்பா, அதன் புனருத்தாரணத்துக்காக ஜெர்மனியின் புத்திசாலித்தனமும், ஜெர்மன் தொழிலாளர்களும் செய்யக்கூடிய பேருதவியைப் புறக்கணிக்கமுடியாது. ஜெர்மன் உற் பத்தி சக்தியை அழித்தும், ஜெர்மானியர்களை விவசாய முறைகளுக்குத் திரும்பவும் அனுப் பினால்தான் உலகத்தினுடையவும், ஐரோப்பாவினுடையவும், அக்கரைகள் ஈடேருமென்று சொல்லுவது நியாயமான கோபாவேசத்தை வெளிப்படுத்துகிறதென்றாலும் அது சிரத்தை யுடன் சர்ச்சை செய்வதற்குறியதல்ல. ஆனால் ஜெர்மனிக்கு அக்கம் பக்கத்திலுள்ள நாடு களுடைய அக்கரையை உத்தேசித்தாவது ஜெர்மன் உற்பத்தியை உச்ச நிலைக்கு அபிவிருத்தி செய்து ஐரோப்பாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஜெர்மனியும் பங்கெடுத்துக் கொள்ளும்படியாக, சிறந்த முறையில் அந்நாட்டின் தொழில் ஸ்தாபனங்களைத் திருத்திய மைக்கவேண்டும். ஜெர்மனியின் தொழிலபிவிருத்தியைக் கோருவது நேசதேசவல்லரசு களின் முக்கியமான பொறுப்பாகும்.

ஏழு ரகசிய கோட்டைகள் லண்டனைக் காப்பாற்றின.

தேம்ஸ் நதியில் போலிக்கால்கள் பேரில் கோட்டைகள்.

(A. J. மாக்வின்னி).

பிரிடனை முற்றுகை செய்வது என்ற ஜெர்மனியின் கனவை மூன்று அம்சங்கள் முறியடித்துவிட்டன.

முதலாவதாக பிரெஞ்சு கடற்கரையிலுள்ள துறைமுகங்கள் விடுவிக்கப்பட்டன. அவைகளைப் பிடித்ததன்மூலம் பீரங்கி குண்டுகளுக்குட்பட்ட டோவர் விடுதலை பெற்றது மட்டுமில்லை, கலேயிலும் காப் கிரீஸ் நெஸிலுமுள்ள பெரிய பீரங்கிகள் நொருக்கப்பட்டபின் கடற்கரை யோரமாகச் செல்லும் பிரிடிஷ் கப்பல்களுக்கு ஏற்பட்ட அபாயம் நீங்கிவிட்டது. அவைகளை எதிரி பிரெஞ்சுத் துறைமுகங்களிலிருந்து பீரங்கிக் குண்டுகளாலும், வெடி விமானங்களாலும், யூ படகுகளாலும், நான்கு வருஷங்களாகத் தாக்கிவந்திருக்கிறான். இப்பொழுது அந்தச் சிறிய கப்பல்கள் அமைதியாகச் செல்லக்கூடும்.

இரண்டாவதாக லண்டனுக்கு வரும் கப்பல்களை சுரங்கவெடி மூலமாக வழிமறிக்காமலும், தாக்குதல் செய்யாமலும் தடுக்க தேம்ஸ் நதியின் முகத்துவாரத்தின் கேந்திர ஸ்தானங்களில் எஃகினாலும், காங்கிரீட்டினாலும் ஏழுகோட்டைகளை பிரிடன் கட்டியிருந்ததென்று இப்பொழுது வெளியாகுகிறது.

முதலெடுப்பில் பிரிடனை முற்றுகை செய்யும் முறையில் அட்லாண்டிக்கில் கப்பல்களை மூழ்கடிக்க ஹிட்லர் முயன்றான். யூ படகுகளின் பிடிப்பிலிருந்து தப்பிய கப்பல்களை துறைமுகத்துக்குப் போகுமுன் நொருக்குவதற்கும் அவன் திட்டம் போட்டிருந்தான். லண்டனைத் துணித்துவிடும் உத்தேசத்துடன் கப்பல்கள் தேம்ஸ் நதிக்குள் நுழையாத படிக்குச் செய்யவும் அவைகளை வெடிகுண்டுகளால் நொருக்குவதற்கும் அவன் பிரியப் பட்டான்.

விமானங்களும், ஈ. படகுகளும் காந்தக்கண்ணிகளையும் சப்தத்தைக் கேட்டு வெடிக்கும் சுரங்க வெடிகளையும் ஒவ்வொரு இரவிலும் தேம்ஸ் நதி முகத்வாரத்தில் ஏராளமாகப் பாவிவிட்டன. லண்டனுக்குச் செல்லும் கப்பல்கள் ஒன்றாகிலும் லண்டனுக்கு செல்லா தென்று பெர்லின் நம்பிக்கைகொண்டிருந்தது.

ஆனால் கடற்கரையின் ஒருபக்கத்தில் போலிக்கால்களின் பேரில் நீர்மட்டத்திற்கு 80 அடி உயரத்திலிருக்கக்கூடிய எஃகு, காங்கிரீட் கோட்டைகள் ரகசியமாகக் கட்டப்பட்டு வந்தன. அவைகளை கேந்திரஸ்தானங்களில் அமைத்து ஜெர்மனியின் சுரங்கவெடி பாவும் விமானங்களை சுட்டுத் தள்ளுவதென்று திட்டம் போடப்பட்டிருந்தது. இந்தக் கோட்டைகள் வேலைசெய்ய ஆரம்பித்தபின் ஜெர்மானியர்கள் லண்டனுக்குப் போகும் மார்க்கத்தில் சுரங்க வெடி பாவும் நடவடிக்கையை முயற்சிக்கவில்லை.

லண்டனை ரக்ஷித்துவரும் இந்த ஏழு கோட்டைகளில் 60 முதல் 120 திறமைபெற்ற கடற்படை, ராணுவ வேலைகாரர்களிருந்து வருகிறார்கள். தேம்ஸ் நதியின் முகத்துவாரத்தில் இதற்குமுன் வெற்றிகரமாக சுரங்க வெடிகளைப் பாவிய விமானங்கள் இப்பொழுது அக்கோட்டைகளின் கண்டுபிடிக்கும் சக்தியையும் நாசவேலையையும் சமாளித்து நிற்கக்கூட வில்லை.

சுரங்கவெடிகளைப் பாவும் ஆகாய விமானங்களை அழிப்பதுடன் இந்த ஏழு கோட்டை களும் மற்ற அலுவல்களையும் மேற்கொள்ளுகின்றன. அவைகளை செப்போலிய யுத்தத்தில்

கட்டப்பட்ட மார்டெல்லி கோபுரங்களின் நவீன உருவங்கள் என்று சொல்லலாம். தேம்ஸ் நதியின் முகத்துவாரத்திற்குள் நுழையக்கூடிய யூ படகுகளைத் தாக்கவும், அவைகளில் மனிதர்களும் முஸ்தீப்புகளுமிருக்கின்றன. அவைகள் வெடி விமானங்களையும், பறக்கும் வெடி குண்டுகளையும் சுட்டுதள்ளிவிடுகின்றன. கடல் விமானங்களின் உதவிக்காக அவைகளிடம் படகுகளிருக்கின்றன. அவைகள் தரையிலுள்ளவர்களுக்கும், கப்பல்களுக்கும் போக்குவரத்து மத்தியஸ்தலமாகயிருக்கின்றன. அவைகளின் அலுவல்கள் இவ்வளவுதான்.

மூன்றாவது அம்சத்தை ஜெர்மானியர்களே விளக்கிக் காட்டுகிறார்கள். யூ படகுகள் மறுபடியும் வெற்றிபெறவேண்டுமென்ற தீர்மானத்துடன் ஜெர்மன் கடற் தளபதியான டோனிட்ஸ் யூ படகுகள் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும்பொழுதே பாட்டரிகளை மறுபடியும் சார்ஜ்செய்ய யூ படகுகளுக்கு வசதியேற்படும்படி புதிய முறைகளை ஆராய்ச்சி செய்து வருகிறான். இந்த நடவடிக்கைமூலம் யூ படகுகள் சமுத்திர மட்டத்துக்கு வராமலே இருந்துவரலாமென்பது கொள்கையில் சரியாகத்தானிருக்கிறது. யூ படகுகள் மறுபடியும் நடமாடுவதற்கும் இது சாதகமளிக்கக் கூடியது. இந்தப் புதிய முறையில் அதிக நம்பிக்கை வளர்ச்சிபெறும்படி ஜெர்மன் கடற்படை நிருபரான காப்டன் ஹான்ஸன் பிரசாரம் செய்து வருகிறான். யூ படகு ஓட்டிகள் இந்த உபாயத்தை ஷ்னூர்க்கெல் என்று அறிவார்கள். தண்ணீருக்குள் செல்லும்பொழுதே இந்த அமைப்பின்மூலம் காற்றை டீசல் என்சின்களுக்கு இழுத்துக்கொள்ளுகிறது. அதன்மூலம் தாக்குதல் அபாயமும் தவிர்க்கப்படுகிறது.

உண்மையில் இந்த உபாயம் பயன் தரவில்லை. ஷ்னூர்க்கெல் பெட்ரோல் உபயோகப்படுவதிலிருந்து யூ படகு வேலைக்காரர்களுக்கு களைப்பும், சோர்வும் அபாரமாக ஏற்படுகின்றன. காப்டன் ஹான்ஸன் இதை ஒப்புக்கொள்ளவில்லை. கால்வாயில் யூ படகுகளுக்கு சமீபகாலத்தில் கிடைத்த வெற்றிகளுக்கு இந்தப் புதிய உபாயம்தான் காரணமென்று அவர் சொல்லுகிறார். விடுதலைப்படைகள் கால்வாயைத் தாண்டிச்சென்றபொழுது அவைகளைத் தாக்க ஷ்னூர்கெல் பெட்ரோலை உபயோகித்துவந்த யூ படகுகள் சென்றபொழுது என்ன நடந்தது. முதல் 24 மணி நேரத்திற்குள் $2\frac{1}{2}$ லக்ஷம் நேசதேசத் துருப்புகள் சகல ஆயுதங்களுடனும் முஸ்தீப்புகளுடனும் பிரான்ஸிலிறங்கின. முதல் 20 நாட்களில் காலநிலை சௌகரியமாக இல்லாவிட்டாலும் 10 லக்ஷம் துருப்புகளிறங்கின. சுரங்க வெடியில் மோதி உடைபட்ட ஒரு கப்பலைத் தவிர மற்ற எந்தக் கப்பலும் போகும்பொழுதும் வரும்பொழுதும் யூ படகுகளால் மூழ்கடிக்கப்படவில்லை. சுரங்கவெடிகள், கடற்கரை பீரங்கிகள், விமானத் தாக்குதல்கள், ஈ படகுகள், யூ படகுகள், மனித மீன் வெடிகள்மூலம் 15 சிறிய கப்பல்கள்தான் மூழ்கடிக்கப்பட்டன.

எதிரிக்கு 17-க்கு அதிகமான யூ படகுகள் நஷ்டமாகிவிட்டன. கால்வாயில் மூழ்கடிக்கப்பட்டு, பிரிடிஷ் யுத்தக் கப்பல்களால் மீட்கப்பட்ட யூ படகுகளின் வேலைக்காரர்களை நான் பார்த்தேன். அவர்கள் யுத்தக் கைதி முகாம்களில் இருக்கிறார்கள். இந்தப் புதிய உபாயத்தைப்பற்றி அவர்களுக்கு யாதொரு பிரமையும் இப்பொழுது இல்லை.

ஷ்னூர்கெல் வாஸ்தவமாக உபயோகமற்றது. எந்த உபாயத்தை மேற்கொண்டாலும் யூ படகுகள் இனிமேல் மகத்தான நடவடிக்கையை ஆரம்பிக்கமுடியாது. சமுத்திரங்களிலும் குறுகலான சமுத்திரங்களிலும் பிரிடனை முற்றுகை செய்துவிடுவதென்ற ஜெர்மனியின் கனவுகள் மறைந்துவிட்டன.

கிரீஸ்.

நேசதேசப் படைகள் கிரேக்கத்தீவிலும், கிரீஸிலும் இறங்கியபின் பால்கன் போர்முனையில் கிரீஸ் நமது கவனத்தைக் கவர்ந்துவிட்டது. ஸிந்து மாகாணத்தைவிட சற்றுப்பெரியதான கிரீஸ் 50,000 சதுர மைல்கள் பரப்புள்ளது. அது மலைப்பாங்கான, வரட்சியான பூமி. ஜனத்தொகையும் அதிகமாகயில்லை. கிரீஸின் இயற்கையமைப்புப் பிரகாரம் அநேக பாகங்களாகப் பிரிக்கலாம். கிரேக்கத் தீவுகள், பெலாப்பனிஸஸ், மத்திய வடக்கு கிரீஸ், கிரேக்க மாஸிடோனியா, திரேஸ்.

கிரீஸில் 17.7 சதவிகிதம்தான் சாகுபடி செய்யப்பட்டபோதிலும் கிரீஸ் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியிருக்கிறது. செழிப்பான பிரதேசங்களில் நவதானியங்கள் பயிரிடப்படுகின்றன. ஒரு சிறிது பருத்தியும் நெல்லும் பயிரிடப்படுகிறது. மகசூல் நாட்டின் தேவைக்குப் போதுமானதல்ல. ஆகையால் கிரீஸ் உணவுப்பொருள்களை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது.

கிரீஸ் புகையிலைக்கும், திராக்ஷை வற்றலுக்கும் பேர்போனது. திராக்ஷை, அத்திப்பழம், ஆரஞ்சு, மற்ற கனிவர்க்கங்கள் அங்கு ஏராளம். அங்கு காட்டு மொரும்பு கிடையாது. ஆலிவ், டமாரிஸ்க், ஜூனிபர், ஓலியாண்டர் மரங்கள் ஓங்கி வளருகின்றன. வசந்த காலத்திலும், வேனிர்கால ஆரம்பத்திலும் காட்டுப்புஷ்பங்களின் நறுமணம் வீசும். ஆடுகள், வெள்ளாடுகளின் சப்தமும் கேட்கிறது.

இந்த அழகான தோற்றத்துக்குப்பின் இயற்கையின் கொடுமையும் காணப்படும். கடுங்குளிருள்ள மாரிகாலத்திற்குப்பின் மழையேயில்லாத வேனிர்காலம் தோன்றும். அப்பொழுது மலை அருவிகள் எல்லாம் வரண்டுபோய்விடும்.

அந்நாட்டில் அநேக உலோகச் சுரங்கங்களிருக்கின்றன. முக்கியமானவை, லிக்னைட், இரும்பு, இரும்புத் தீக்கல், மெக்னீஷியம், குரோமியம், ஈயம்,, பளிங்கு.

நவீன நாகரீகமுள்ள கிரீஸ் உண்டாகியபொழுது ஆதென்ஸ் ஒரு சிறிய கிராமமாகயிருந்தது. இன்று அது கிரீஸின் முக்கியமான தலைநகரமாகிவிட்டது. நகரைச் சுற்றிலுமுள்ள தோற்றம் உலகத்திலேயே மிகவும் ரம்மியமானது.

அதைச் சுற்றிலுமுள்ள கடலின் அமைப்பு கிரீஸின் வாழ்க்கையையும், ஜனங்களின் குணங்களையும் நன்றாய் பாதித்திருக்கிறது. அதன் அழகுக்கும் கடல்தான் முக்கியகாரணம். வானம் எப்பொழுதும் நிர்மலமாக இருக்கும். மலைகள் அழகாக, உன்னதமாக நிற்கின்றன. பூமி சிகப்பு வர்ணமுள்ளதாகயிருக்கிறது.

1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 28-ம் தேதியன்று இதாலி படையெடுத்தபொழுது அச்சுநாடுகளை எதிர்த்து கிரீஸின் போராட்டம் துவங்கியது. கிரேக்கர்களின் தீரமும் வலிமையும் உலகத்தாரையும் இதாலியர்களையும் பிரமிக்கச் செய்துவிட்டது. இதாலியர்களிடம் கிரீஸ் சரண் புகுந்துவிடவில்லை.

1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம் தேதியன்று ஜெர்மன் படைகள் பல்கேரியன் எல்லையைத்தாண்டி முன்னெச்சரிக்கையன்றியில் கிரீஸில் ஸலோனிகாவிலிருந்து துருக்கி எல்லைச்சரகம் வரையில் பரவியிருக்கும் பிரதேசத்தைத் தாக்கின. கிரேக்கர்கள் பலமாக எதிர்த்துப் போராடியபோதிலும் அவர்களால் சமாளித்து நிற்கமுடியவில்லை. எஞ்சிய பிரிடிஷ், ஆஸ்திரேலிய, நியூஸிலாந்துப் படைகள் கடலுக்குள் தப்பி ஓடின. ஏப்ரல் 27-ம் தேதியன்று ஜெர்மன் படைகள் ஆதென்ஸுக்குள் புகுந்தன.

1941-ம் வருஷத்தில் பிரிடனுக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. ஜெனரல் வேவலிடமிருந்த படைகள் எல்லாம் ஆபிரிக்காவில் நடைபெற்ற போருக்கு அவசியமாக இருந்தன. ஆகிலும் ஆபிரிக்காவிலிருந்த படைகளின் ஒரு பாகம் கிரீஸுக்கு அனுப்பப்பட்டது. அப்படையின் பாதிபாகம் பிரிடிஷார்கள், மற்ற பாதி ஆஸ்திரேலியர்கள் நியூஸிலாந்திலிருந்து வந்தவர்கள்.

ஜெர்மனியின் கொடுமையையும், அக்கிரமமுமான பழிவாங்கும் நடவடிக்கைகளையும் கண்டு மனம் கலங்காமலும், பசிப்பிணியின் கொடுமையைக்கண்டு மனம் தளராமலும் கிரேக்கர்கள் போரை நடத்திவந்தார்கள். மேதாவிகளும், கலாசாலை மாணவர்களும், விவசாயிகளும், தொழிலாளர்களும், பொதுஜன சேவகர்களும், அரசாங்க ஊழியர்களும் அரிய சேவைகளைச் செய்துவந்தார்கள்.

போர்முனையிலிருந்து தகவல்களை ஒலிபெருக்குகிறவர்கள்.

போர்முனையிலிருந்து ஒலிபெருக்கிகள்.

(*R.* மாகாரியஸ்).

1930-ம் வருஷத்தில் மஞ்சூரியாவில் சீன ஜப்பானிய யுத்தம் நடந்தபொழுது அமெரிக்காவில் ஒலிபெருக்கைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு திடீரென்று ஒரு தகவல் கிடைத்தது. பாட்டுக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்தபொழுது ஒரு புகழ்பெற்ற ஒலிபெருக்கும் நிலயம் மத்தியில் குறுக்கிட்டது. ஒலிபெருக்கில் மந்தமான, தெளிவற்ற சில சப்தங்கள் வெளிவந்தன. சப்தம் அதிகரித்துப் பிறகு திடீரென்று ஓய்ந்துவிட்டது.

அதன்பின் ஒரு சப்தம் பின்வருமாறு கேட்டது "இப்பொழுது தூரக்கிழக்கிலுள்ள போர்முனையிலிருந்து நேராக அனுப்பப்பட்ட தகவல்களைக் கேட்டிருப்பீர்கள்." ஒலிபெருக்கும் கருவியுடன் சென்ற ஒரு அமெரிக்க பத்திரிகை நிருபர் பரிக்ஷார்த்தமாக ஒலிபரப்பினார். அதனால் ஜனங்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சி ஸ்வாரஸ்யமானது. யுத்தத்தை விரும்பாத கோஷ்டிகள் "யுத்தத்தைத் தவிர்க்காமல் அதை ஒலிபரப்பு மூலம் அமெரிக்காவுக்கு அனுப்புவது தவறு" என்று கண்டனம் செய்தார்கள்.

இதற்குப்பின் போர்முனையிலிருந்து ஒலிபெருக்கும் முறையில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது.

இப்பொழுது ரேடியோ உள்ள மோட்டார் இல்லாத போர்முனையே கிடையாது. ஐரோப்பாவில் படைகளிறங்கியபின் அதன் முறைகள் ஆச்சரியப்படத்தக்க முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. முதன் முதலில் ஒலிபெருக்கி பேசும் ஸினிமாவுக்கு ஒப்பிடக்கூடியதாக இருந்தது. எவ்வித சப்தமும் கேட்கும். மெதுவாக நடக்கும் சப்தமும் ஒரு பெரிய படை செல்லுவதுபோல் கேட்கும். மெதுவாக மூடப்படும் கதவுகளின் சப்தம் பிரமாதமாகத் தோன்றும். போர்முனையிலிருந்து ஒலிபெருக்குகிறவர்கள் மத்தியில் மூன்றுவது

அம்சமிருக்கிறதென்பதை வற்புறுத்திவந்தார்கள். யுத்த நிருபர்களின் ஒலிபெருக்கும் சப்தத்தை விமானங்களின் ஆரவாரமும், பீரங்கிகளின் சுடு சப்தமும், யந்திர பீரங்கிகளின் அட்டகாசமும் பங்கப்படுத்திவிட்டன.

சில சமயங்களில் ஒலிபெருக்கும் சப்தத்தைவிட மற்ற சப்தங்கள் அதிக பலமாக இருந்தன. லண்டனை ஜெர்மன் வெடி விமானங்கள் தாக்கியபொழுது அது முதல்தர போர் முனையாக மாறியபொழுது இந்த நிலமை தோன்றிற்று. அப்பொழுது அமெரிக்க ஒலி பெருக்கும் கருவிகளை லண்டன் தெருக்களிலேயெ அமைத்து வைத்திருந்தார்கள். அப்பொழு தும் வெடிகுண்டுகளின் தாக்குதலினால் அதிர்ச்சி ஏற்பட்டுவந்தது. ஆயிரம் மைல்களுக் கப்பால் ஒலிபெருக்கைக் கேட்டவர்கள் வெடி விமானங்கள் வட்டமிடுவதையும், வீடுகள் இடிந்து விழுவதையும், தீயணைக்கும் எஞ்ஜின்கள் செல்லுவதையும், உதவி செய்ய வைத்திய மோட்டார்கள் செல்லுவதையும் சப்த ரூபமாகக் கேட்டார்கள். அநேக இரவுகளில் லண்டனுக்கு எவ்வித அபாயம் ஏற்பட்டதென்று அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஆரம்பம் முதல் போர்முனையிலிருந்து ஒலிபெருக்குவதை ஜெர்மானியர்கள் பரிஷ்காரம் செய்திருந்தார்கள். ஒலிபெருக்குகிறவர்கள் பிரசார கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். அவர் கள் ஒலிபெருக்கிகளையும், ஆயுதங்களையும் பெற்ற ஸோல்ஜர்கள்தான். அவர்கள் போர்முனை யிலிருந்து தாங்களே ஒலிபெருக்குவதுடன் போர்முனையிலுள்ள பல்வேறு சேனைப் படையி லுள்ளவர்களும் பிரதிநிதிகள் மூலம் ஒலிபெருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

ருஷ்யப்போரில் மாரிகாலத்தில் ஜெர்மானியர்கள் நம்பத்தகாத கஷ்டங்களை அனுபவித்த பொழுதும், பனிக்கட்டி மூடிய ஒளிகளில் துக்கம் நிரம்பியிருந்தபொழுதும் ஒலிபரப்புகளி லும் இந்தக் கோரமான தொனி கேட்டது. ஒலிபெருக்காளர்கள் கம்பீரமாகப் பேசுவதை விட்டுச் சாதாரண மனிதர்களைப்போல் பேசத்துவங்கி, ராணுவ ஒழுங்கு முறையையும் மீறி தங்களுடையவும், தங்களுடைய சகாக்களுடையவும் அவஸ்தையை உலகத்தாருக்கு பிரகடனம் செய்தார்கள்.

போர்முனையிலுள்ள நேசதேச ஒலிபெருக்காளர்களும் தேர்ச்சி பெற்றவர்கள்தான். ஆகையால் அவர்கள் ராணுவ த்வனியை மேற்கொண்டார்கள். வெற்றிகளையும், பிற்போக்கு களையும் அவர்கள் உள்ளது உள்ளதுபோல் சொல்லிவந்தார்கள். ஒலிபெருக்காளர்கள் வெடி விமானங்களுடன் பெர்லினுக்குச் சென்று தெளிவாக தங்களுடைய அபிப்பிராயங்களை எடுத்துரைத்தார்கள். பெர்லினில் ஏராளமான அக்கினி ஜுவாலைகளும், தேடு விளக்குகளும், சுளுந்துகளும் காணப்பட்டனவென்று அவர்கள் வெளியிட்டார்கள்.

அவர்கள் ஜெனரல் மாண்ட்காமரியின் முன்னணிப் படைகளுடன் ஒலிபெருக்கும் கருவியுடன் டிரிபோலிடானியாவுக்கும் டுனிஸியாவுக்கும், சென்றார்கள். மண் மாரி பெய்த பொழுதும் ஆபிரிக்காவில் படைகள் வெற்றிகரமாக முன்னேறின நடவடிக்கைகளை அவர்கள் ஒலிபெருக்கினார்கள். கேட்கிறவர்கள் மனதை உருகும்படி செய்யக்கூடிய சில அற்புதச் செய்கைகளும் ஒலிபரப்பில் கிடைத்தன. பிலிம்களில் காணக்கூடிய தகவல்களை அவன் ஒலிபெருக்கி மூலம் கேட்டுவிடலாம். ஆபிரிக்காவில் போர் தொடுப்பது எவ்வகைப்பட்ட தென்று அவன் அறிந்து கொள்ளுவான். ரத்தம், வியர்வை, பரிச்ரமம் என்று மிஸ்டர் சர்ச்சில் சொன்ன மொழிகளின் அர்த்தம் ஒலிபெருக்காளரின் இனியகுரலில் வெளிப்படுத்தப்பட்டது.

நார்மண்டியில் படைகளிறங்கியபின் போர்முனையிலிருந்து நிரந்தரமாகத் தகவல்கள் ஒலிபெருக்கப்படுகின்றன. ஒலிபெருக்காளர்கள் அதற்குச் செவிகொடுப்பவர்களை ஒரு போர்முனையிருந்து மற்றொரு போர்முனைக்கு இழுத்துச் செல்லுவார்கள். எல்லா முனை களிலும் ஒலிபெருக்காளர்கள் தயாராக இருக்கிறார்கள். போர்முன்னணியிலும், டாங்கிப் படைகளுடன், பீரங்கிகளுடனும், தாத்காலிகமான விமான தளங்களிலும், வைத்திய வசதி யுள்ள மோட்டார்களிலும், நாசகாரிகளிலும், சாமான் கப்பல்களிலும் அவர்கள் இருப்பார் கள். ஒவ்வொருவராக அவரவருடைய அபிப்பிராயங்களை ஒலிபெருக்குவார்கள். குடைகள் மூலம் தரையில் இறங்கி அவர்கள் கண்ணுறக் கண்ட கோரமான சம்பவங்களையும் அவர்கள் வெளியிடுவார்கள். சம்பவங்கள் எவ்விதமிருப்பினும் இறுதி வெற்றி சமீபித்துவிட்டதென்ற தோற்றம் அவர்களுக்குண்டாகியிருக்கிறது.

யுத்த தந்திரத்தில் ஒரு பாகமாக உள்ள இந்த ஒலிபெருக்கிகள் போர்முனை முழக்கத் தினால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. இந்த ஆரவாரமும் பின் திரைபோலிருக்கிறது. ஒலிபெருக்காளரின் த்வனியும், அவர் வெளியிடும் தகவல்களும்தான் நம்முடைய கவனத்தைக் கவருகின்றன.

நார்மண்டியில் படைகளிறங்கிய சில நாட்களுக்குப்பின் ஒலிபெருக்கு கேட்கிறவர் களுக்கு ஒரு அற்புதமான தகவல் கிடைத்தது. பிரெஞ்சு ஒலிபெருக்காளரான ஷுமான் பேயோவில் ஜெனரல் டிகால் வந்துவிட்டதாக ஒலிபெருக்கினார். அடுத்தபடியாக பிரான்ஸில் நான்கு வருடங்களுக்குப்பின் விடுதலைபெற்ற பிரதேசத்திலுள்ள பிரெஞ்சு மக்கள் தெருக் களில் பாடும் தேசிய கீதத்தின் த்வனி பலமாகக் கேட்டது.

ஜப்பானின் பலஹீன அறிகுறிகள்.

குறைவான ஐச்வர்யங்கள்.

(நியூ ஸ்டேட்ஸ்மன் அண்டு நேஷன் என்னும் பத்திரிகை.)

ஜப்பானிய பிரதிநிதி சபையில் செப்டம்பர் 7-ம் தேதியன்று ஜெனரல் காயிஸோ சொற்பொழிவாற்றியதில் பேர்ல் துறைமுக நடவடிக்கைக்குப்பின் எந்த ஜப்பானிய ராஜதந்திரியும் இவ்விதமான ஸ்வாரஸ்யமான அறிக்கையை வெளியிடவில்லை.

ஜப்பானிடம் ஐச்வர்யங்களும், யுத்த தளவாடங்களும் குறைவாக இருக்கின்றன என்பதை ஜப்பானிய நிர்வாகம் நன்றாய் அறிந்துவிட்டதென்பதை இது ஊர்ஜிதப்படுத்துகிறது. பொதுஜனங்களின் மனப்பான்மை, யுத்த உற்பத்திசாலைகள், உணவுப்பொருள் ஸப்ளை, மனித பலம், உள்நாட்டு தற்காப்பு முதலியவற்றைப்பற்றி அவர் பேசினார். இவையெல்லாம் திருப்திகரமாக இல்லையென்று அவர் ஒப்புக்கொண்டார்.

போர்முனையிலும் உள்நாட்டிலும் ஜப்பானியர்கள் போர் புரியும் மன உறுதி முன்போலிருக்கவில்லை என்றும், எதிர்பார்த்ததற்குக் குறைவாகயிருக்கிறதென்றும் அவர் ஸ்பஷ்டமாகச் சொன்னார். இது குறிப்பிடத்தக்க விஷயம். சென்ற பன்னிரண்டு மாதங்களாக ஜப்பான் தோல்வி பெற்றுவருவதிலிருந்து ஜப்பானின் சக்தி முறியடிக்கக்கூடியதல்லவென்ற மனப்பான்மை சீர்கெட்டுவிட்டதென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. இந்தத் தோல்விகளின் விளைவு அதிகமென்றும், ஸோல்ஜர்கள் மனத்தளர்ச்சி அடைந்துவிட்டதுடன் உள்நாட்டுப் போர்முனையும் கலவரமடைந்துவிட்டதென்று காயிஸோ சொல்லுகிறான். ஜனங்களுக்கு ஆயாசம் ஏற்பட்டுவிட்டது. யுத்தப் போக்கும் திருப்திகரமாக இல்லை. ஆக்ஷிமுறையைக் கண்டும் அவர்களுக்கு அருவருப்பு உண்டாகியிருக்கிறது. இதற்குக் காரணம் யாதென்று அரசாங்கத்தார் அறிவார்கள்.

"பொதுமக்களின் பூரா ஒத்துழைப்பன்னியில் கடுமையான போரை நடத்துவது இயலாது" என்று காயிஸோ சொல்லுகிறான். ஆகையால் பொதுஜனங்களுக்குப் பூராத் தகவல்களையும் எடுத்துக்காட்டி அவர்களுக்குள்ள கூட்டுப்பொறுப்பை அறிவூட்டி அவர்களின் நியாயமான அபிப்பிராயங்களுக்குச் செவி சாய்ப்பதென்று நிர்வாகம் முடிவு செய்திருப்பது வியப்பாக இருக்கிறது. ஜப்பானில் இந்த நடவடிக்கைக்கு உடன் காலத்திலேயே அனுபவம் ஏற்பட்டிருக்கும். பொதுஜன அபிப்பிராயத்தை நிர்வாகம் அவமதித்ததும், பொதுஜன மனப்பான்மையை யதேச்சாதிகார முறையில் ஒழுங்குபடுத்தியதும் வரம்பு மீறிச் சென்றுவிட்டன.

மனித பலத்திலும் இவ்விதமான குழப்பமான நிலைமை காணப்படுகிறது. கொரியா, பார்மோஸாவிலிருந்து வந்த தரைப்படை, கடற்படையின் அரிய சேவைகளைப் பாராட்டியதும் இந்தச் சேவைப் படைகளை நன்றாக நடத்துவதில் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் ஞாபகப்படுத்தியதும், ஆக்கிரமித்த அல்லது கைப்பற்றிய நாடுகளின் போர் புரியும் சக்தியை ஜப்பான் நம்ப ஆரம்பித்துவிட்டதென்றும் இதுவரையில் அப்படைகளை ஜப்பான் திருப்திகரமாக நடத்தவில்லையென்றும் தெளிவுபடுத்துகின்றன.

காயிஸோவின் அபிப்பிராயத்தை கவனித்தாலேயே ஜப்பானிய யுத்த தொழிற்சாலைகளிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்று வெளிப்படும். அந்திய காலத்தில் புதிய உற்பத்தி முறைகளை மேற்கொள்ளவேண்டுமென்று திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் இந்த முறைகளில் பயிற்சி பெறவேண்டும். இதுவரையில் ஜப்பான் ஆதரித்துவந்த ஜப்பானின் பிடிவாதமான ஐதீகத்தை ஜப்பானின் உயர்தர யதேச்சாதிகாரம் இப்பொழுது உதறித் தள்ளிவிடுகிறது. யுத்த தளவாட உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் இப்பொழுது அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. அத்தியாவசியமில்லாத தொழில் ஸ்தாபனங்களை மூடிவிட வேண்டும் அல்லது ஒத்தி வைத்துவிடவேண்டுமென்று காயிஸோ சொல்லுவதும் காலம் தப்பிச் சொன்னதாகும்.

ஜப்பானின் உள்நாடுகளிலிருந்து ஒரு வருஷத்திற்கு 11 அல்லது 14 மிலியன் டன்கள் எடைமானமுள்ள எஃகு உற்பத்தி செய்யக்கூடிய பொருளாதாரம் கிடைத்து வருகிறது. இது போதாதென்று காயிஸோ அபிப்பிராயப்படுகிறான். ஜப்பானின் துணைக்காவல் கப்பல்களுக்குப் போதுமான விமானப்படை ரக்ஷணை அளிக்க முடியவில்லை என்பதுடன் ஜப்பானில் கப்பல் கட்டும் சக்தியும் பலமாகக் குறைந்துவிட்டது. இப்பொழுது ஜப்பான் எஃகினால் கட்டிவரும் 8,00,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களும், மற்ற மரக்கப்பல்களும் அதன் கப்பல் நஷ்டத்தை ஈடுபடுத்த முடியவில்லை. ஜப்பானிலும், ஜப்பான் கைப்பற்றியிருக்கும் நாடுகளிலும் மரக்கப்பல்களைக் கட்டுவது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. கோயபல்ஸ் ஒரு சமயத்தில் ரகசிய ஆயுதத்தைப்பற்றி அழகாகப் பிரசாரம் செய்ததுபோல் மரக்கப்பல்கள் கட்டுவதைப் பற்றியும் ஜப்பானின் பிரசாரம் பலமாக நடந்துவருகிறது.

கப்பற்படைபலம் பலமாகக் குறைந்துவிட்டால்தான் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் உட்புற வட்டாரத்தில் பொருளாதார அபிவிருத்தி அதிகரிக்கும்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விமானத் தாக்குதலின் விளைவுகளையும் காயிஸோ அறியாமலில்லை. விமானத் தாக்குதலுக்குட்படாமல் முக்கியமான தொழிற்சாலை ஸ்தாபனங்களை ரக்ஷிக்கும் முறைகள் பலப்படுத்தப்படவேண்டியது அவசியம் என்று காயிஸோ சொல்லுகிறான். விமான நடவடிக்கை எச்சரிக்கைகளையும், பொதுஜன தற்காப்பு முறைகளையும் விஸ்தாரப்படுத்த புதிய நடவடிக்கைகளும், திட்டங்களும் வெளிவந்திருக்கின்றன. ஜப்பானிலும் படையெடுப்பு ஏற்படுமென்ற தோற்றமும் உண்டாகிவிட்டது. தேசம் பூராவும் ஆயுதபாணிகளாக நிற்க வேண்டும். ஜப்பானுக்கு முக்கியமான போக்குவரத்து மார்க்கங்களை வெடிவிமானங்கள் தாக்கியதின் விளைவுகள் ஜப்பானில் நன்றாய் தோன்றிவிட்டன. ஆகாயத்திலிருந்து தளங்களை நொருக்கும் சக்தியை நாம் பெற்றுவிட்டதிலிருந்து ஸ்தானங்களைச் தாண்டிச் செல்லுவது சாத்தியமென்று தோன்றிவிட்டது. ஜப்பானிய தொழிற்சாலைகளைத் தாக்கும் நடவடிக்கைகள் பலப்படும்பொழுது, அதன் விளைவுகளும் அபாரமாகயிருக்கும்.

இந்த முடிவைத் தடுத்து விடலாமென்று காயிஸோ இன்னும் நம்பியிருக்கிறானா? அவனுடைய அபத்தப் பஞ்சாங்கமுள்ள பேச்சில் பொருக்கி எடுக்கப்பட்ட சில வாக்கியங்கள் அவனுடைய அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்துகின்றன. ஜப்பானிலுள்ள 100 மிலியன் ஜனங்கள் வெற்றிக்காக பிரயாசைப்படுவதென்றும், யுத்த முயற்சியை அதிகரிப்பதென்றும், ஏற்பட்டதென்பது மனிதர்களின் பிரயத்தனம் தீர்ந்துவிட்டதென்றும், தெய்வத்தின் அனுகூலம்தான் வேண்டுமென்பதைக் குறிப்பிடுகிறது. இதன் தாத்பரியம் ஸ்பஷ்டமாகயிருக்கிறது.

பூச்சிகளால் ஏற்படும் தொத்து நோயை ஒழிக்க நடவடிக்கை.

நவீன ஆராய்ச்சியின் முன்னேற்றம்.

(ஆசிரியர் A. M. லோ).

உலகத்தில் மிகவும் கொடிய தொத்து நோய்களை பூச்சிகள்தான் பரவச் செய்கின்றன, ஈக்கள் பிளேக் முதலிய தொத்து வியாதிகளை கொண்டுபோகின்றன. டைபஸ் வியாதியை பேன்கள் பரவச் செய்கின்றன. கொசுக்கள் மலேரியா ஜுரத்தை அதிகரிக்கின்றன. சாதாரண ஈக்கள் மற்ற அநேக வியாதிகளை உண்டுபண்ணுகின்றன. இதை நாம் நன்றாய் அறிந்தால் அதைத்தடுக்க நாம் ஏற்பாடு செய்யலாம். நவீன முறைகளும், சுகாதார கொள்கைகளும் பூச்சிகள் மூலம் பரவும் தொத்து வியாதிகளைக் குறைக்க அநேக ஏற்பாடுகள் செய்து இருக்கின்றன. உஷ்ணரேகை செல்லும் பாகத்தில் இந்தப் பூச்சிகள் வராமல் தடுப்பது அசாத்தியமான காரியம். ஒரு வருஷத்தில் 3 மிலியன் ஜனங்கள் மலேரியா ஜுரத்தினால் மரணம் அடைகிறார்கள். 100 மிலியன் ஜனங்கள் ஜுரத்தினால் பீடிக்கப்படுகிறார்கள்.

நெருக்கடியான சில சமயங்களில் சாதாரணமான சுகாதார முறைகளை அனுஷ்டிக்க முடியாது. அந்த சமயத்தில் தொத்து வியாதிகள் அதிகரிக்கின்றன. டைபஸ் ஜுரம் பரவுகிறது. இதற்குமுன் யுத்தத்தில் தோட்டாக்களிலிருந்தும், சனியன்களிலிருந்தும் உண்டாகுவதைவிட தொத்து வியாதியால் அதிக மனித நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்தில் பூச்சிகள் மூலம் உண்டாகும் தொத்து நோயைத் தடுக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஓனாய்களையும மற்ற காட்டு மிருகங்களையும் கொன்று பத்திரத்தை சம்பாதித்துகொள்ள வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பது போல் தொத்து வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளை அழிக்கும் காலம் வந்து விட்டது என்று சொல்லலாம்.

நேசதேசத்தார்கள் தொத்து வியாதிகளைத் தடுக்க அநேக மருந்துகளைக் கண்டுபிடித்து அவைகளைப் போர்முனையில் உபயோகித்து வருகிறார்கள். சமாதான காலத்தில் அவைகளை பொதுஜன வாழ்க்கைக்கு உபயோகப்படுத்தும்பொழுது ஈக்களும், கொசுக்களும் உள்ள ஒரு வீடும் இருக்காது.

அந்த மருந்துகளில் முக்கியமானது D. D. T. என்று குறுகிய பெயருள்ள ஷக்கொளோரோ டிபேனில் டிரிக்கோளோரதேன் ஒன்று. இந்த ரசாயனம் ஆபிஸ் வம்சத்தைச் சேர்ந்த பூச்சிகளைத் தவிர பாக்கி பூச்சிகளைக் கொன்றுவிடும். அது மனிதனுக்கும், வீட்டிலுள்ள பிராணிகளுக்கும் கெடுதல் செய்யாது. சருமத்துக்கு கெடுதல் செயயாது. அதன் அழிக்கும் சக்தி நீடித்திருக்கும். இந்த திராவகம் போட்டதுணியைக் கட்டிக்கொண்டிருந்தவன் இரண்டு மாதங்கள் வரையில் கவலைப்படவேண்டியதில்லை. துணிமணிகளையும் தோய்த்துக் கட்டிக்கொள்ளலாம். இந்த மருந்து போடப்பட்ட ஒரு அறையில் மூன்று மாதங்

கள் வரையில் ஈக்களும், கொசுக்களும் அணுகாது. D.D. T. என்ற மருந்து 1874-ம் வருஷத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அதைக்கண்டு பிடித்தவர் அதன் சக்தியை உணரவில்லை. யுத்தத்துக்கு முன் அதை ஸ்விட்ஸர்லாந்திலுள்ள கியாதிபெற்ற கேகி கம்பெனி புதுப்பித்தது. அந்த மருந்தை கிருமிகளைக் கொள்ளவும் உருளைக்கிழங்கை அழித்து வந்த பூச்சிகளையும் கொல்ல உபயோகித்தார்கள். இரண்டு வருஷங்களுக்கு முன் இதை பிரிடிஷ் அமெரிக்க நிர்வாகங்களின் கவனத்துக்கு அவர்கள் கொண்டுவந்தார்கள். மருந்தை ஏராளமாக உண்டு பண்ணி அதை சேனைகளுக்கு எவ்விதம் உபயோகப்படும்படி செய்வது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டது. சலவை செய்தாலும் மருந்தின் உபயோகம் குறைவுபடாத வண்ணம் துணிமணிகளுக்கு மருந்தைப்போட பிரிடன் ஏற்பாடுகளைச்செய்தது. இந்த மருந்தில் துர்நாற்றம் கிடையாது. பிரான்ஸிலுள்ள ஒவ்வொரு பிரிடிஷ் சிப்பாயும் மருந்து துவைத்த ஆடைகளை அணிந்துகொண்டு இருக்கிறதினால் அங்கு பிளேக் வியாதியே கிடையாது. சென்ற மாரிகாலத்தில் D. D. T. மிகுதியாக தயாரிக்கப்பட்டு நேபிள்ஸில் பரிக்ஷை செய்யப்பட்டது. இதாலியின் சீதோஷ்ண ஸ்திதியில் டைபஸ் ஜுரம் பரவியது. ஜனங்களுக்கு நித்திரை செய்யக்கூடிய இடங்கள் குறைவாக இருந்ததாலும் உஷ்ணத்துக்காக அவர்கள் நெருங்கி வாழவேண்டியிருந்ததாலும் பிளேக் பரவி விடும்போல் தோன்றிற்று. டைபஸ் ஜுரத்துக்கு மாரிகாலம்தான் கொண்டாட்டமான காலம். இதற்குமுன் வசந்த காலம் வரையில் தொத்து வியாதியை அடக்க முடியவில்லை.

இதாலிக்கு D. D. T. மருந்து விமான மூலம் கொண்டுபோகப்பட்டதால் ஒரு மாதத்திற்குள்ளாக வியாதிக்கு காரணமான பூச்சிகள் அழிக்கப்பட்டன. நோய்வாய்ப்பட்டவர்களின் தொகை நாளடைவில் குறைந்தது. இந்த மருந்தை எல்லோரும் உபயோகப்படுத்திய பின் அந்த வியாதியே அற்றுப்போய்விட்டது. ஐரோப்பாவுக்கும் அது பரவாமல் தடுக்கப்பட்டது.

ஐரோப்பா விடுதலை பெறும்பொழுது அங்கு நிச்சயமாக உண்டாகக்கூடிய டைபஸ் வியாதியை சமாளித்து விடலாம் என்று தேசதேச வைத்திய நிபுணர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள். வெகுகாலமாக டைபஸ் ஜுரத்தை போக்கும் உபயோகமுள்ள மருந்தை டாக்டர்கள் தேடி வந்தார்கள். டைபஸ் ஜுரத்தை பரவச்செய்யக்கூடிய பூச்சிகளை D. D. T. மருந்து அழித்து வந்ததால் அதுதான் டைபஸ் ஜுரத்துக்கு சிறந்த பரிகாரம்.

மற்றொரு சக்தி வாய்ந்த பிரியான் என்ற வாயு. இதற்குமுன் அதை ஷீதளப் படுத்துவதற்காக உபயோகித்து வந்தார்கள். அது வெகு சீக்கிரத்தில த்ரவமயம் ஆகி விடும். ப்ரியான் தனிப்பட்ட முறையில் பூச்சிகளைக்கொல்லாது. பூச்சி மருந்துகளை அது திரவமயமாக்கும். ஏரோஸால் என்ற திராவகத்தைத் தெளித்து விட்டால் அதிலுள்ள நுட்பமான பாகங்கள் ஆகாயத்தில் வெகுகாலம் தங்கிருந்து காற்றின் மூலமாக ஒவ்வொரு அறைக்கும், கூடாரத்துக்கும் பரவிவிடும்.

பிரியான் மனிதர்களுக்கு கெடுதல் செய்யாது. இந்த திரவரூபமான வாயு பூச்சிகளைக் கொல்லும் மருந்தை பலப்படுத்தி அதன் சக்தி மூலமாக பரவச்செய்யக்கூடிய சக்திபெற்றது. இந்த திராவகமானது வாயுவின் மூலம் சிறு துளிகளாகத் தெளிக்கப்படுகிறது.

கொசுக்களை அழிக்க உபயோகப்படும் பிரத்திரின் என்ற மருந்து ஒரு பாத்திரத்தில் அடைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள ஒரு அடைப்பானை திறந்தால் 250 தடவை மருந்து வெளிப்படும். ஒருதடவையில் போடப்படும் மருந்து ஒரு கூடாரத்திலுள்ள எல்லா கொசுக்களையும் கொல்லப்போதுமானது. நாலைந்து தடவை மருந்தை உபயோகித்தால் ஒரு விமானத்தின் அறைகள் சுத்தியாய்விடும்.

மருந்தடங்கிய பாத்திரத்தை உஷ்ணந்தரேகையிலுள்ள ஸோல்ஜர்கள் தங்களுடைய சாமான்களுடன் சேர்த்து கொண்டு போகிறார்கள். இந்த மருந்தை கொசுக்களுக்கு இருப்பிடமான குளங்களிலும் தெளிக்கலாம். யுத்தத்துக்குப்பின் உஷ்ணந்தரேகை செல்லும் மார்க்கங்களில் செல்லும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் விமானங்களிலும் சாமான் ஏற்றிச் செல்லும்விமானங்களிலும், தெளித்து கொசுக்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் பரவாதபடி தடுக்கப்படலாம்.

கொசு இல்லாத வீடுகளை அமைக்கவும், வாழ்க்கையை சுகப்படுத்தவும் இந்த முறைகள் சௌகரியமளிக்கக் கூடும். மற்ற மருந்துகளுடன் ஏரோஸோலையும் உபயோகப்படுத்தி வரலாம். பூச்செடிகள் வேரிலும், மரங்கள் வேரிலும் தொத்து வியாதிகளைப் பரவச்செய்யும் பூச்சிகளை கொண்டு போகும் வீட்டிலுள்ள பிராணிகள் பேரிலும் தெளிக்கலாம். வியாதிப் பூச்சிகளை அழிக்கக் கூடிய உயர்தரமான புதிய மருந்துகளும் உபாயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

(10) குடியானவனும், விவசாயமும்.

(மைகேல் ப்ரௌன்).

இந்தியாவின் எதிர்கால திட்டத்தை நிறுவுவதில் கைத்தொழில்களுக்கும் விவசாயத்துக்கும் சமமாகவே கவனம் செலுத்தப்பட்டது. தொழிற்சாலைகளை ஸ்தாபித்தல் பூலோக ஸ்வர்க்கம் ஏற்பட்டுவருமென்று ஒரு சிலர் நினைக்கிறார்கள். இன்னும் சிலர் இந்தியர்களில் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசித்தும், இந்தியாவின் உணவுப் பொருள் உற்பத்திக்குப் பொறுப்பாளிகளாகவும் ஏழைகளாகமிருப்பதால் விவசாயம் முதலில் கவனிக்கப்படவேண்டுமென்று சொல்லுகிறார்கள். சென்ற இரண்டு வருஷங்களில் இந்தியா நெருக்கடியான நிலைமைக்கு வந்துவிட்டதென்று எல்லோரும் அறிவார்கள். நாட்டுப்புறத்திலுள்ளவர்களின் பிற்போக்கினால் தேசத்துக்கு அபாயம் ஏற்படுமென்றும் புலப்பட்டுவிட்டது.

ஆகையால் டில்லியில் திட்டம் போடுகிறவர்கள் விவசாயத்தை அதிகரிக்க 1,000-கோடி ரூபாய் செலவில் 15-வருஷ கெடுவில் பூர்த்தி செய்யக்கூடிய திட்டத்தைத் தயாரித்து அதை பிரசாரம் செய்திருப்பதும் நியாயம்தான். அபிவிருத்தி ஏற்பட்டபின் சீர்திருத்தங்களை பரிபாலிக்க ஒரு வருஷத்துக்கு 20-கோடி ரூபாய்கள் செலவாகும். அதாவது சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய ஒவ்வொரு ஏகராவுக்கும் ஒன்பது அணா செலவாகும்.

இந்தப் புள்ளி விவரங்கள் மதிப்புத்தான். ஆனால் அவைகளிலிருந்து திட்டத்தின் போக்கு வெளிப்படுகிறது.

திட்டங்களைப் போடுவதும் அட்டவணைகளைப் பிரசுரிப்பதும் அழகாகத்தானிருக்கிறது. தனிப்பட்ட குடியானவனின் நிலைமை என்ன? அவனிடம் சில விரிவான அபிவிருத்திகள் காணப்படுகின்றன. நாம் குறிப்பிட்டிருக்கும் ஆலோசனைகளை அமுலுக்குக் கொண்டுவந்தால் இந்திய விவசாயியும் அவனுடைய குடும்பமும் முன்னைவிட சுகமாக வாழக்கூடும். அவர்களுக்குப் பூர்ணமான ஆகாரம் கிடைக்கும். அவர்களுடைய கடன் பளுக் குறையும். அல்லது இல்லாமல் போய்விடும். கல்வியில்லாதவர்கள் இருக்கமாட்டார்கள். உலகத்தாருடன் அவர்கள் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். மனிதர்களுக்கோ அல்லது கால்நடைகளுக்கோ தொத்து வியாதி இல்லாமல் போய்விடும்.

சிறந்த முறைகள்.

தேசத்தின் உணவுப்பொருள், இடவசதி, ஆடை, கல்வி முதலியவற்றைச் விருத்தி செய்யக்கூடிய திட்டத்தைப்பற்றிப் பேசிவிட்டோம். சாகுபடி செய்கிறவனுக்கும் இவைகளில் ஒரு பங்குண்டு. அத்துடன் அவனும், அவனுடைய பிள்ளைகளும் நவீன முறையில் சாகுபடியைச் செய்ய பயிற்சியளிக்கப்படுவார்கள். அதைக்கொண்டுவந்தால் அதிகப் பொருளும் கிடைக்கும். இது அவனுக்கு லாபகரமானது.

நிலங்களை எவ்விதம் விருத்திசெய்யக்கூடும். நீர்ப்பாசன வசதியை விருத்திசெய்யலாம். பெரிய அணைகளும், ஜலாசயங்களும், அநேக மைல்கள் செல்லக்கூடிய கால்வாய்களும் நாடெங்கும் அமைக்கப்படும் என்பதில்லை. கால்வாய்மூலம் நீர்ப்பாசன வசதி அதிகரிக்கப்படும். திட்டம் போடுகிறவர்களின் அபிப்பிராயம் நிறைவேறினால் ஆங்காங்குள்ள ஜலவசதிகளை சாத்தியமான முறையில் பிரயோஜனப் படுத்தப்படும். கிணறுகளும் மிகுதியாகவும் நன்றாகவும் வெட்டி அமைக்கப்படும். ஜல சக்தியால் ஓடும் குழாய்கள்மூலம் தண்ணீர் இறைக்கப்படும். வசதியுள்ள இடங்களில் மின்சார சக்தியும் உபயோகிக்கப்படும். நதியின் இருபக்கத்திலும் உன்னதமான கரைகளிருந்தால் வயல்களுக்குப் போகும் கால்வாய்களுக்கு நதியிலுள்ள தண்ணீர் யந்திரங்களின்மூலம் பாய்ச்சப்படும். பருவகால மழை பெய்யக்கூடிய இடங்களில் வெள்ளப்பெருக்கைத் தேக்கிவைக்க ஏரிகள் பலப்படுத்தப்படும். குளங்கள் ஆழமாக தோண்டப்படும். புதிய குளங்களும் வெட்டப்படும்.

சில பிரதேசங்களில் முக்கியமாக பீஹார், வங்காளம், பஞ்சாப் முதலிய இடங்களில், நிலங்களில் தேங்கியிருக்கும் தண்ணீரை குழாய்கள்மூலம் அப்புறப்படுத்தப்படும்.

நீர்ப்பாசன வசதியின் அவசியத்தைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் தண்ணீரில்லாமல் நிலங்களைச் சாகுபடி செய்யமுடியாது. பருவகால மழையின் ஏமாற்றத்திலின்றும் விவசாயிகளை ரக்ஷித்துவிடமுடியாது. வருஷத்துக்கு இரண்டு தடவையும் பயிரிடமுடியாது.

பருவகால மழை பெய்யும் பிராந்தியங்களில் நீர்ப்பாசன வசதியைப்பற்றி நான் சொல்லுவது முக்யத்துவமுள்ளது. நீர்ப்பாசன நிபுணர்கள் இந்த இடங்களிலுள்ள விவசாயிகள் பருவகால மழையைத் திருப்தியுடன் நம்பியிருந்தார்களென்று நினைத்து அந்தப் பிராந்தியங்களை அலக்ஷியம் செய்துவிட்டார்கள். உபரி ஜல வசதியில் பயிர்கள் செழிப்பாக இருக்குமென்பதை அவன் உணராததாலோ அல்லது பயிர் அபிவிருத்திக்கு நிலம் போதுமான செழிப்புள்ளதல்லவென்று அவன் நினைப்பதாலோ அவன் அந்த மனப்பான்மையுடன் இருந்துவருகிறான்.

உரம்.

நிலத்திற்குப் போடும் உரத்தைப்பற்றி கவனிப்போம். நமது ஜீவதசையிலேயே கிராமங்களில் சுவர்களில் வரட்டி தட்டுவதே நின்றுவிடும். குடியானவர்களின் பெண்சாதிகள் விறகையும் கரியையும் உபயோகித்து சமையல் செய்வார்கள். அவர்கள் எருவை நிலங்களில் போடுவார்கள்.

கிராமங்களில் சேர்க்கை உப்புகளும் ஏராளமாகக் குவித்துவைக்கப்படும். இவையெல்லாம் சேர்ந்து இந்தியாவின் நாட்டுப்புறங்களில் அபிவிருத்தியை உண்டுபண்ணும். பயிர்கள் செழித்தோங்கி வளர்ச்சிபெறும் வயல்கள் சாகுபடியன்னியில் தரிசாக சிலகாலமிருக்கும். கிராமத்தில் தரிசு நிலங்களே காணக்கிடைக்காது. எருக்களையும் போட்டு சாஸ்திர முறைப்படி நிலங்களை மாறி மாறி சாகுபடி செய்துவந்தால் சில நிலங்களைத் தரிசு போடவேண்டிய அவசியமே ஏற்படாது.

அப்பொழுது குடியானவன் சுருசுருப்புடனிருப்பான். ஒருபோக சாகுபடிக்குப் பதிலாக அவன் இருபோக சாகுபடியை மேற்கொள்ளலாம். எல்லா நிலங்களையும் சாகுபடி செய்யலாம்.

இது விரும்பத்தக்கதென்று நினைக்கவேண்டாம். இந்திய விவசாயியைப்பற்றி அநேகம் சொல்லப்படுகின்றன. அவன் அவசியத்துக் கதிகமாக சிரமப்படமாட்டான். இதற்கும் நியாயமிருக்கிறது. உபரி வேலை செய்தால் அதற்குத் தகுந்த பலன் கிடைப்பதில்லை.

உபரி வேலைகள்.

குடியானவன் எல்லா நிலங்களையும் சாகுபடி செய்தால் அவனுடைய குடும்பத்தவருக்கு அதிக வேலையிருக்கும்.

சிறுமிகளும், சிறுவர்களும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றால் நிலங்களுக்கு வேலிகளை அமைக்கவேண்டியிருக்கும். நிலங்களிலிருந்து அறுவடை அதிகரிக்கவேண்டுமானால் அதிலுள்ள புல் பூண்டுகளையும், பூச்சிகளையும் அப்புறப்படுத்தவேண்டும். விவசாயியும் அவனுடைய குடும்பத்தாரும் அந்த வேலையையும் செய்யவேண்டும்.

அவன் அந்த வேலைகளைச் செய்யமாட்டான். அறியாமையாலும், சோம்பேறித்தனத்தாலும் அவன் மறுதலித்து விடுவான். அவனை போதனை மூலமாகவும் நடைமுறையிலும் திருத்திவிடலாம். இதைப்பூர்த்தி செய்ய 1,000 கோடி ரூபாய்கள் திட்டப்படி கிராம வேலைக்காரர்கள் வேண்டும்.

கிராம வேலைக்காரர்களைப்பற்றி பின்வருமாறு சொல்லப்படுகிறது. "அவனுடைய கிராமத்தில் அவன் சுருசுருப்புள்ளவனாக இருக்கவேண்டும். தொழில் நிபுணர்களுக்கும் கிராமக் குடியானவர்களுக்கும் அவன் தொடர்பு ஆபீஸராக இருக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் இலாகாக்களிலிருக்கும் நிலயங்களில் நூதன முறையில் செய்யப்படும் விவசாயம், கால்நடை வளர்ச்சி, முதலியவற்றில் அவனுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அந்த முறைகளை அவன் கிராமத்தில் பரவச் செய்யவேண்டும். அவன் கிராமத்தின் ராயசத்தை எழுதவேண்டும். அவனுக்கு சகலமான தகவல்களும், கலைகளைப்பற்றிய குறிப்புகளும், புதிதாகக் கண்டுபிடித்த முறைகளும் அனுப்பப்படும். அதிகாரிகளிடமிருந்து கிராமத்திற்குத் தேவையான சர்பராக்களை, அதாவது விதைகள், எரு, பூச்சி மருந்து முதலியவற்றை வரவழைத்து கூட்டுறவு சங்கம் மூலமாக விநியோகம் செய்ய அவன் ஏற்பாடு செய்வான். அவனுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 200 உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

கிராம வேலைக்காரர் திறமையுடன் வேலைசெய்தால் மற்றவர்களும் அவனைப் பின்பற்றுவார்கள். கிராமத்தில் பரவக்கூடிய புல்பூண்டுகளை வளர்ப்பவர்களும் அவசியமில்லாத பயிர்களை சாகுபடி செய்யவேண்டுமென்று சொல்லுகிறவர்களும் என்ன செய்வார்கள்.

அவர்களையும் நல்லவழிக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும். திட்டம் போடுகிற வர்களெல்லாம் குடியானவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவர போதித்துவருவார்கள். அவர்களும் இதற்கு உத்தரவாதம் செய்வார்கள். ஒரு சிறிது கட்டாயமும் இருக்கவேண்டும். அது இருந்தால்தான் சோம்பேறிகளை கிராமத்தைக் கெடுத்துவிடாமல் தடுத்துவிடக்கூடும். செல்வாக்குள்ள கிராமப் பஞ்சாயத்துகளை நியமிப்பது உபயோகமுள்ளதாக இருக்கும்.

இந்த நிலைமையில் சாகுபடியைத் துரிதப்படுத்தவும், தேகப் பிரயாசையைக் குறைக்கக் கூடியவரையில் சாதகமுமான யந்திரசாதனங்களை உபயோகிக்கவும் குடியானவர்கள் ஆவலுட னிருப்பார்கள்.

யந்திரங்களும் வேலையில்லாமையும்.

யந்திரங்களை உபயோகித்தால் கிராமத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமென்ற தோற்றம் உண்டாகியிருக்கிறது. இது பிரமாதமானதல்ல. டாக்டர் பர்ண்ஸ் சொல்லுகிற படி யந்திரங்களை உபயோகித்தால் வேலைக்காரர்கள் குறைந்துவிடும். ஏகராவுக்குத் தேவை யுள்ள தொழிலாளர்கள் குறைவுபடாது. சாஸ்திரமுறையில் சாகுபடி செய்தால் அநேக வேலைகள் அதிகரிக்குமென்பதை சாதாரண இந்திய விவசாயி மறந்துவிடுவான்.

சிலாக்கியமான சாகுபடி முறையைக் கையாண்டால் நாட்டுப்புறங்களில் பல ரகமான பயிர்களை உற்பத்தி செய்யலாம். 1,000 கோடி ரூபாய் திட்டத்திலும் இந்த அபிப்பிராயம் காணப்படுகிறது. அந்த திட்டப்படி தான்யம் 10 சதவிகிதமும், நவதான்யம் 20 சதவிகித மும், கொழுப்பும் எண்ணெயும் 20 சதவிகிதமும், கனி வர்க்கங்கள் 20 சதவிகிதமும், காய் கறிகள் 100 சதவிகிதமும், பால் 300 சதவிகிதமும் அதிகரித்துவிடும்.

பாலின் அபிவிருத்தி முக்கியத்துவமுள்ளது. அதற்காக நம்மிடம் சிலாக்கியமான பசுக்களிருக்கவேண்டும். அவைகளுக்கு நல்ல மேய்ச்சல் பொருளுமிருக்கவேண்டும். கால் நடைகளை மேய்ச்சலுக்காக காடுகளுக்கு ஓட்டிச் செல்லாமல் மேய்ச்சல் பொருள்களை நாம் வளர்ச்சி செய்யவேண்டும். இந்த முறையிலும் இந்தியாவில் அபிவிருத்தி ஏற்படவேண்டும்.

அமிதத்தைத் தடுப்பது.

மேற்சொல்லிய சௌகரியங்கள் எல்லாவற்றையும் செய்து கொடுத்தாலும் குடியான வனுக்கு சௌகரியமான நிலைமை ஏற்படுமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அபரி மிதமாகப் பொருளிருந்தால் அது பயன்படாதென்று இந்திய விவசாயிகள் அறிவார்கள்.

ஒவ்வொருவரும் அவருக்குப் போதுமான உணவுப் பொருளை வாங்கக் கூடுமானால் தேவைக்கு உபரியாக ஸப்ளை இருக்காதென்று விவாதிக்கலாம்.

துரதிருஷ்ட வசமாக விவசாயி இதை அறியக் கூடவில்லை. தரகுக்காரர்கள் அநியாய லாபம் சம்பாதிக்காமல் தடுக்கப்படுவார்களென்றும் சொல்லக்கூடவில்லை.

ஆரம்பத்தில் விவசாயியின் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும். விலையும் எல்லோருடைய சக்திக்கு எட்டினதாகயிருக்கவேண்டும். ஆகையால் தரகுக்காரர் களுக்கு அதிக லாபமில்லாமல் செய்துவிடவேண்டும். இதை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வும், வியாபார ஸ்தலங்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுவது மூலமாகவும் சாதித்து விடலாம். இந்த முயற்சியிலும் யந்திரங்களை அடைத்து கூட்டுறவு சங்கத்தைக் கெடுத்து விடக் கூடிய முட்டாள்களை அடக்கியாள கட்டாய முறைகளும் அவசியமாகும்.

விவசாயிக்கு எருக்கள், உரங்கள், விதைகள், ஆயுதங்கள், ஜலம் முதலியவற்றைக் குறைந்த தீர்வைக்கு ஸப்ளை செய்வதினால் உற்பத்திச் செலவு குறைவுபடுமாகையால் உணவுப் பொருள் வசதியும் அதிகப்படும்.

இன்னும் சில அம்சங்களை நாம் கவனிக்கவேண்டும். சிலாக்கியமான விதைகள், சிலாக்கிய மான ஆயுதங்கள், பயிர்களையும் கால்நடைகளையும் தொத்து நோய்களிலிருந்தும் வியாதிகளி லிருந்தும் காப்பாற்றுவது, நவீன முறைகளைப்பற்றி அதிகத் தகவல்கள், சாகுபடிக்காக டிரெக்டர்கள், போரடி யந்திரங்கள் முதலியவற்றைக் கூட்டுறவு முறையில் உபயோகித்தல் போன்றவைகள் கவனிக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் இந்தியாவின் குடியானவர் களின் எதிர்கால க்ஷேமத்திற்கு அவசியமானவை. இவைகள் சாத்தியமில்லாத கனவு களல்ல. எவ்வளவுக்கெவ்வளவு குடியானவன் அவைகளை விரும்புகிறானோ அவ்வளவுக்கவ் வளவு சீக்கிரத்தில் அவைகள் நடந்தேறும்.

'வி' டயரி - 1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—8—0; ஷீப்ஸ்கின் ரு. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில்
முதல் காபிக்கு ரூ. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

15—11—44 முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 220 (6-வது பிரிவு).

21-10-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
22-10-44	அன்னவாசல்	... ,,	7.00
,,	கீழக்குரிச்சி	... ,,	7.30
23-10-44	பெருமாநாடு	... மாலை	7.00
,,	புல்வயல்	... ,,	7.30
24-10-44	சடயம்பட்டி	... ,,	7.00
,,	ஒலியமங்கலம்	... ,,	7.30
25-10-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
25-10-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	கீழாநிலை-புதுப்பட்டி	... மாலை	7.00
,,	கீழாநிலைக்கோட்டை	... ,,	7.30
26-10-44	மலம்பட்டி	... ,,	7.00
,,	போரம்பூர்	... ,,	7.30
27-10-44	பொ. புதுப்பட்டி	... ,,	7.00
,,	வேந்தம்பட்டி	... ,,	7.30

பிரஸங்கம் 221. (1-வது பிரிவு).

28-10-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	7.00
29-10-44	கீரனூர்	... ,,	7.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30
30-10-44	குடுமியாமலை	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
31-10-44	பெருங்களூர்	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30
1-11-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
1-11-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
2-11-44	பூங்குடி	... ,,	7.00
,,	சத்தியமங்கலம்	... ,,	7.30
3-11-44	மிரட்டுநிலை	... ,,	7.00
,,	அரிமளம்	... ,,	7.30
4-11-44	உடையாளிப்பட்டி	... ,,	7.00
,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

21—10—44	வெட்டம்விடுதி.
22—10—44	மருதன்கோன்விடுதி.
24—10—44	ராமச்சந்திரபுரம்.
26—10—44	குழிபிறை.
27—10—44	புதுக்கோட்டை.
28—10—44	திருமெய்யம்.
29—10—44	விராச்சிலை.
31—10—44	கோனுபட்டு.
2—11—44	கிழாநிலை.
3—11—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—24—10—44.